118

பூகோள சாஸ்திரம்

சேலம் ஜில்லா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 - JAN 1940
MADRAS

3237

E. M. கோபாலகிருஷ்ணகோன்

மதுரை, சென்னை.

GEOGRAPHY

OF THE

SALEM DISTRICT

CLASS IV

915.482 [1]

BY

V. Vedanayagam, B.A., L.T.,
Head Master, L. M. High School, Salem

Revised by

V. Subburathnam, Iyer, B. A., L. T.,
Geography Assistant, Islamiah High School, Melvisharam

In accordance with 'New Syllabus for Elementary Schools, 1939'

E. M. GOPALAKRISHNA KONE

MADURA MADRAS

Rights Reserved] 1939 [Price As. 6

First Edition—1939

Printed at the Excelsior Power Press, Madura. Page 1 to 20 & 54—57,
Do Lalitha Press, Madras. Page 21 to 53,

முகவுரை

இச்சிறு புத்தகம் இவ்வருஷம் (1939) துரைத்தனத்தார் வெளியிட்ட புதிய பாடத் திட்டத்தை யொட்டி நான்காவது வகுப்பு மாணவர்களுக்காக எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது.

பூகோள சாஸ்திரமாவது மனிதன் எப்படி இயற்கையின் சக்தியை ஜயித்துப் பூமியைத் தன் இருப்பிடமாக்கிக் கொண்டான் என்பதைக் குறிக்கின்றது. ஓர் பிரதேசத்தின் இயற்கை யமைப்பினால் மழை, சீதோஷ்ணம் ஆகிய இவைகளும், மழை, சீதோஷ்ணத்தால் பயிர்களும், பயிர்களால் மானிட வாழ்க்கையும் விசேஷ மாறுதல்களை அடைகின்றன.

இவ்விஷயங்கள் ஒன்றை யொன்று எவ்வளவு தூரம் பாதிக்கின்றன என்பதை ஆராயப் பல உண்மைகள் புலப்படும்.

"தெரிந்தவைகளைக் கொண்டு தெரியாதவைகளைக் கற்றுக் கொள்ளுதல்" என்பது போதனா முறையில் முக்கிய விதியாகும். அதேபோல, பூகோளப் பாடத்திலும், ஒவ்வோர் புது விஷயத்தையும் கற்பிக்கும் பொழுது அடிக்கடி அந்தந்தக் கிராமத்துக்குச் சமீபத்திலுள்ள விஷயங்களைப் பிள்ளைகளுக்கு ஞாபகப்படுத்தி, அவைகளை ஒப்பிட்டுக் காட்ட வேண்டும். உதாரணமாக ஒரு மலைப் பிரதேசத்தைப்பற்றிப் போதிக்கும் பொழுது, சமீபத்திலுள்ள குன்றுகளைக் குறிப்பிட்டு, இவற்றிற்கும் அதற்கும் பரிமாணம் முதலியவைகளில் உள்ள சம்பந்தத்தைக் குறிப்பிடலாம்.

இதற்காகப் பிள்ளைகளை அடிக்கடி உல்லாசப் பிரயாணங்களுக்கு (Excursions) அழைத்துச் செல்வது நலம். சமீபத்திலுள்ள குன்றுகள், ஏரிகள், நதிகள், வயல்கள், வண்டிப்பேட்டை, பஸ்கள் நிற்குமிடம், ரயில்வே ஸ்டேஷன் ஆகிய இவைகளுக்குக் குழந்தைகளை அழைத்துச் சென்று, இவைகளைப் பற்றிய விஷயங்களை நேராகத் தெரிந்து கொள்ளும்படி செய்தால், மற்ற வெளியிடங்களைப் பற்றிப் பயிலுங்காலத்து, இவ் விஷயங்கள் அதிக உபயோகமுள்ளவைகளாக இருக்கும். "சுதேசப் பிரதேசமே (Home Region) எல்லாப் பூகோள சம்பந்தமான விஷயங்களையும் அறிந்து கொள்ளுவதற்கேற்ற ஆராய்ச்சிச் சாலை."

உல்லாசப் பிரயாணம் செய்யும் சமயத்தில், வழியில் கிடைக்கும் அதிசயப் பொருள்கள், தானியக் கதிர்கள், இன்னும் மற்றப் பொருள்களை அவ்வப்போது சேர்த்து, ஒவ்வொரு வகுப்பிலும் பொருட்காட்சிகள் (Museums) வைக்கலாம். சமாசாரப்பத்திரிகைகள், ரயில்வே விளம்பரங்கள், சர்க்காரின் விவசாய வர்த்தமானங்கள், மற்றும் இதர இலாகாக்களில் வெளியிடப்படும் அறிக்கைகளில் பூகோள சம்பந்தமான வர்த்தமானங்கள் ஆகிய இவைகளையும் சேகரித்தல் நலம்.

போக்கு வரவு மார்க்கங்களைப் பற்றிச் சொல்லுமிடத்து, நேராக அவைகளில் பிரயாணம் செய்வதுபோல் வர்ணனை முறையின் பற்றப்பட்டிருக்கிறது. மாணவர்கள் படித்த பாடங்களைத் தாமே சிந்தித்து, விஷயங்களை உணர்வதற்கேற்ற பயிற்சிகள் ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் பல கேள்விகள் பிள்ளைகளின் சொந்தக் கிராமங்களைப் பற்றியவையாகும்.

இப் புத்தகத்தின் முன்னேற்றத்துக்குரிய விஷயங்கள் வந்தனத்துடன் அங்கீகரிக்கப் பெறும்.

ஆசிரியர்.

பொருளடக்கம்

பாடம்	விஷயம்	பக்கம்
போது விபரம்		
1.	எட்டுத் திசைகள்	1
2.	வெயில், மழை, மேகமுள்ள நாட்கள்	2
3.	பருவ காலங்கள்	3
4.	வாயு, காற்று	4
5.	தண்ணீர் நீராவியாகுதல்	5
6.	மழையும் அதன் செய்கையும்	6
7.	கடலும் கடற் பிரயாணமும்	7
8.	கிராமமும் நகரமும்	9
9.	எங்கு, எவ்விதம் நகரங்கள் உண்டாகின்றன ?	12
10.	கிராமங்களிலும் நகரங்களிலும் ஜனங்களின் வாழ்க்கையிலுள்ள வித்தியாசங்கள்	,,
11.	உள்ளூரில் விளையும் அறுவடைத் தானியங்கள்	13
12.	போக்கு வரவு மார்க்கங்கள்	15
13.	சந்தை கூடுமிடம்	17
14.	தொழிற்சாலைகள்	18
15.	படங்களும் பிளான்களும்	19
சேலம் ஜில்லா		
16.	எல்லைகள்	21
17.	இயற்கை யமைப்பு: மலைகள், காடுகள், நதிகள்	23
18.	ஜில்லாவிலுள்ள, விளைபொருள்களும், கைத் தொழில்களும்	26
	1. விளைபொருள்கள்	,,
	2. கைத்தொழில்கள்	28
19.	தாலூகாக்களும், முக்கிய ஊர்களும், அங்கு நடைபெறும் தொழில்களும்	30
	(1) சேலம் தாலூகா	,,
	(2) ஓமலூர் தாலூகா	33
	(3) தர்மபுரி தாலூகா	34
	(4) ஹொசூர் தாலூகா	35
	(5) கிருஷ்ணகிரித் தாலூகா	36
	(6) ஹரூர் தாலூகா	,,
	(7) ஆத்தூர் தாலூகா	37
	(8) நாமக்கல் தாலூகா	38
	(9) திருச்செங்கோடு தாலூகா	39
20.	போக்குவரவு சாதனங்கள்	40
	1. சேலம் நகர்	41
	2. ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம்	44
	1. சாலை மார்க்கம்	,,
	2. ரயில் மார்க்கம்	49
21.	வியாபாரம்	52
22.	சீதோஷ்ண நிலை; அதற்கும் தாவரங்களுக்கும் மனித வாழ்க்கைக்கும் உள்ள சம்பந்தம்	55

பூகோள சாஸ்திரம்
நான்காம் வகுப்பு

பொது விவரம்

முதல் பாடம்

எட்டுத் திசைகள்

பிள்ளைகளே, அதி காலையில் நாம் படுக்கையை விட்டு எழுந்து வெளியே வந்து சூரியன் உதிப்பதைக் காண்கிறோம் அல்லவா? சூரியன் உதிக்கும் திசைக்குக் கிழக்கு என்று பெயர். நாம்



கிழக்குப் பக்கம் திரும்பி நின்றால், மற்றத் திசைகளைச் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம். நமது முதுகு புறம் இருக்கும் திசை மேற்கு; வலக் கைப் புறம் தெற்கு; இடக்கைப்புறம் வடக்கு

இந்த நான்கு திசைகளுக்கும் இடையிடையே மூலையில் வேறு நான்கு திசைகளும் இருக்கின்றன. அவைகளுக்கு உப திசைகள் என்று பெயர். வடக்கு, கிழக்கு ஆகிய இவைகளுக்கு நடுவே வடகிழக்கும், கிழக்கு, தெற்கு ஆகிய இவைகளுக்கு நடுவே தென்கிழக்கும், தெற்கு, மேற்கு ஆகிய இவைகளுக்கு நடுவே தென் மேற்கும்,



திசைப் படம்

மேற்கு, வடக்கு ஆகிய இவைகளுக்கு நடுவே வட மேற்கும் உள. ஆகவே



திசை காட்டும் கருவியின் படம்

திசைகள் எட்டு. இத்திசைகளைச் சுலபமாகத் தெரிந்துகொள்ள ஒரு கருவி இருக்கிறது. அதற்குத் தமிழில் "திசைகாட்டும் கருவி" என்று பெயர். அதில் எட்டுத் திசைகளும் குறிக்கப்பட்டிருப்பதைப் பாருங்கள். அதன் மத்தியில் காந்த ஊசி அமைக்கப்பட்டிருக்கிறது. அது அசையும் தன்மை

யுடையது. அதன் ஒரு நுனி எப்பொழுதும் வடக்கையே நோக்கி நிற்கும். அதைக் கவனித்தால் மற்றத் திசைகளை இலகுவில் கண்டுபிடிக்கலாம்.

ஒரு தேசப்படத்தின் திசைகளை அறிவது எப்படி? படத்தைச் சுவரில் தொங்கவிட்டு, அதை நோக்கி ஒரு



தேசப்படத்தின் திசைகளை அறிதல்.

பையன் நின்றால், படத்தின் தலைப் பக்கம் வடக்கு; அடிப்பக்கம் தெற்கு; பையனது வலக் கைப்பக்கம் கிழக்கு; இடக் கைப்பக்கம் மேற்கு.

இரண்டாம் பாடம்

வெயில், மழை, மேகமுள்ள நாட்கள்

பிள்ளைகளே, ஒரு நாளில் பாதிப் பொழுது வெளிச்சமாக இருக்கிறது. அப்பொழுதைப் பகல் என்று சொல்லுகிறோம். பாதிப் பொழுது இருட்டாக இருக்கிறது. அப்பொழுதை இரவு என்று சொல்லுகிறோம். பகற் பொழுது சூரியனுடைய வெப்பத்தால் சூடாகவும், இராப் பொழுது சூரிய வெப்பம் தோற்றாததால் குளிர்ச்சியாகவு மிருக்கிறது. நீங்கள் காலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்கும் போது வெயில் அதிகமாக இருப்பதில்லை. அதேபோல் நீங்கள் மாலை வேளையில் பாடசாலையிலிருந்து வீட்டுக்குத் திரும்பும் போதும் அவ்வளவு வெயில் இல்லை யல்லவா? ஆனால் நடுப் பகலில் வெயில் மிகவும் அதிகமா யிருக்கிறதல்லவா? ஒவ்வொரு நாளிலும் இம்மாதிரி மாறுதல்களைக் காண்கிறோம்.

சில தினங்களில் நாம் சூரியனைப் பார்க்கமுடியாதல்லவா? ஏன்? அப்போது சூரியனை மேகங்கள் மறைத்துக் கொண்டிருக்கின்றன. இம்மாதிரிமேகமுள்ள நாட்களில் சூரியன் நமக்கு நன்றாய்த் தெரியாது. அந்தத் தினங்களில் வெயில் குறைவாக இருக்கிறது. ஆகையால் அந்த நாட்களில் நடுப்பகலில் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குப் போகும் போதாவது, மறுபடி பள்ளிக்கூடத்துக்குப் போகும் போதாவது வெயில் சுடுவதில்லை அல்லவா?

வேறு சில தினங்களில் வெயிலே இருப்பதில்லை. அந்நாட்களில் ஆகாயத்தில் மேகங்கள் சூழ்ந்து கொண்டு மழைபெய்கின்றன. மழை நாட்களில் நீங்கள் பள்ளிக்கூடத்துக்குப் போவதும், சாயங்கால நேரங்களில் பந்து முதலியவை விளையாடுவதும் கஷ்டமாயிருக்கிறதல்லவா? சில நாட்களில் இம்மாதிரியான மாறுதல்களைக் காண்கிறோம்.

பயிற்சி

1. எட்டுத் திசைகள் எவை? அவைகளை நீ எப்படிக் கண்டு பிடிப்பாய்?

2. எந்தக் கருவியில் எட்டுத் திசைகளும் காட்டப்பட்டிருக்கின்றன?

3. ஒவ்வொரு நாளும் சீதோஷ்ண நிலை எவ்விதம் மாறுபடுகிறது?

(உபாத்தியாயருக்குக் குறிப்பு:—கீழ்க்கண்ட வாறு உள்ளூரின் சீதோஷ்ணத்தைக் குறிக்கும் அட்டவணை யொன்று தயார் செய்து, அதை ஒவ்வொரு நாளும் வகுப்பில் பிள்ளைகளின் எதிரே பூர்த்தி செய்யவும். உதாரணமாக, முதல் தேதி யன்று வெயில் அதிகமாயிருந்தால் வெயில் நாள் என்ற தலைப்பின் கீழ் முதல் தேதிக்கு நேரே × இம்மாதிரி அடையாளம் செய்யவும். பெரிய கடிதாசியில் ஒவ்வொரு மாதத்துக்கும் தனித்தனி அட்டவணை தயார் செய்து, வகுப்பில் பிள்ளைகள் பார்க்கும்படியாகச் சுவரில் தொங்கவிடவும். மாதக் கடைசியில் ஒவ்வொரு தலைப்பின் கீழும் எத்தனை நாட்கள் என்று குறிப்பிடவும்).

சீதோஷ்ண அட்டவணை

ஊரின் பெயர்....................... ....மாதம்

தேதி	வெயில் நாள்	மழை நாள்	மேகமுள்ள நாள்	காற்று அடிக்கும் நாள்

மூன்றும் பாடம்

பருவ காலங்கள்

முன் பாடத்தில் ஒவ்வொரு நாளும் காலையிலும், நடுப்பகலிலும், சாயங்காலத்திலும் வெயில் ஒரே மாதிரி இருப்பதில்லை என்றும், சில நாட்களில் வெயில் அதிகமாகவும், சில நாட்களில் குறைவாகவும், சில நாட்களில் குளிர் மிகுந்தும் சில நாட்களில் மழை மிகுந்தும் இருக்கின்றன என்றும் படித்தோமல்லவா? இம் மாதிரி ஒரு வருஷத்தில் ஏற்படும் மாறுபாடுகளுக்குப் பருவ காலங்கள் என்று பெயர்.

ஒரு வருஷத்திற்குப் பன்னிரண்டு மாதங்கள் அல்லவா? இப்பன்னிரண்டு மாதங்களையும் சீதோஷ்ண மாறுதல்களுக்குத் தக்கவாறு ஆறு பருவங்களாகப் பிரித்திருக்கிறார்கள். மழை அதிகமாய்ப் பெய்யு நாட்களைக் கார் காலம் என்றும், குளிர் அதிகமாக உள்ள நாட்களைக் குளிர் காலம் என்றும், குளிருடன் பனியும் இருக்கும் நாட்களைப் பனிக்காலம் என்றும், பனிக்காலத்தில் சில நாட்களில் முன் இரவில் பனி அதிகமாயுள்ள நாட்களை முன் பனிக்கால மென்றும், பின் இரவில் பனி அதிகமாயுள்ள நாட்களைப் பின் பனிக்காலமென்றும், வெயில் அதிகமாயுள்ள நாட்களை (கோடைக் காலம்) வேனிற்காலமென்றும், வேனிற்கால ஆரம்பத்தை இளவேனிற்கால மென்றும், வெயில் அதிகமான காலத்தை முது வேனிற் கால மென்றும் பிரித்திருக்கிறார்கள்.

அவை யாவன:—

சித்திரை, வைகாசி — இளவேனிற் [காலம்.

ஆனி, ஆடி — முதுவேனிற் காலம்.

ஆவணி, புரட்டாசி — கார் காலம்.

ஐப்பசி, கார்த்திகை — குளிர் காலம்.

மார்கழி, தை — முன்பனிக் காலம்.

மாசி, பங்குனி — பின்பனிக் காலம்.

வேனிற் காலத்தில் தாவரங்கள் தளிர் விடும். பூஞ்செடிகள் பூத்து வாசனை வீசும். இளவேனிற் காலத்தில் குடியானவர்கள் தேவதைகளுக்குப் பொங்கலிட்டு விழாக் கொண்டாடுவார்கள். கார் காலத்தில் பகலில் கடு வெயில் காயும். மாலையில் மழை பெய்யும். ஆறு குளங்களில் நீர் நிரம்பும். குளிர் காலம் வரை குடியானவர்கள் நிலங்களை உழுது விவசாயம் செய்வார்கள்; பனிக் காலத்தில் பயிர் அறுவடை செய்வார்கள்.

பயிற்சி

1. நமது ஜில்லாவில் எந்த மாதங்களில் உஷ்ணம் அதிகமாயிருக்கிறது ?

2. எந்த மாதங்களில் குளிர்ச்சி அதிகமாயிருக்கிறது ?

3. பருவங்களின் பெயரையும் ஒவ்வொன்றுக்குரிய மாதங்களின் பெயரையும் சொல்லு.

நான்காம் பாடம்

வாயு, காற்று



நாம் வசிக்கும் பூமியைச் சுற்றி வாயு வியாபித்திருக்கிறது. அதை நாம் கண்ணால் பார்க்க முடியாது. ஆனால் அது நம் மேல் வீசும் போதும், மரம், இலைகள் முதலியன அசையும்போதும், அதன் செய்கையை யறிந்து கொள்ளலாம். மனிதர்கள், பிராணிகள், செடி, கொடிகள் முதலியன வாயு இல்லாவிட்டால் ஒரு நிமிஷமும் வாழ முடியா.

தண்ணீர் மேடான இடத்திலிருந்து பள்ளத்திற்கு ஓடுகின்றதல்லவா? அதே போல வாயுவும் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு வீசுகின்றது. பொதுவாக, குளிர்ந்த இடத்திலிருந்து உஷ்ணமான இடத்திற்கு வாயு வீசுகின்றது. இப்படி ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு வீசும் வாயுவுக்குக் காற்று என்று பெயர். மெல்லிய காற்றை மந்த மாருதம், தென்றல் என்றும், பலமாக வீசும் காற்றைப் புயல், சூறவளி என்றும் சொல்லுவார்கள்.

காற்று நமக்கு அதிக உபயோகமுள்ளது. கோடைக் காலங்களில் இரவில் அதிகப் புழுக்கமாயிருக்கும்பொழுது, நம்மீது குளிர்ந்த காற்று வீசினால் நமக்கு எவ்வளவு சுகமாயிருக்கிறது! காற்றினால் நமக்கு மற்றோர் உபயோகமும் உண்டு. காற்று, மேகங்களைத் தள்ளிக்கொண்டு வந்து, நமக்கு மழையைக் கொடுக்கும்படி செய்கிறது.



காற்றின் திசைகாட்டும் கருவி

நாம் தெருவில் நிற்கும்போது காற்று வீசினால், அது எந்தத் திசையிலிருந்து எந்தத்திசைக்குவீசுகின்றது என்பதை யறியலாம். அன்றியும் இங்குப் படத்தில் காட்டியுள்ளது

போல் ஓர் கருவி இருக்கிறது. அதில் மேலே காட்டியுள்ள அம்பு போன்ற பாகம் சுலபமாகச் சுற்றக் கூடியது. கீழே காட்டியிருக்கும் நான்கு திசைகளின் அடையாளங்களும் நகராதவை. காற்று வீசும்போது, அது எந்தத் திசையை நோக்கி வீசுகின்றதோ அந்தத் திசையை நோக்கி அம்பு திரும்பும். அப்பொழுது கீழே குறிப்பிட்டிருக்கும் திசைகளின் உதவியால் காற்று எப்பக்கம் வீசுகிற தென்பதையறியலாம்.

(உபாத்தியாயருக்குக் குறிப்பு:— படத்தில் காட்டியுள்ளபடி காற்றுத் திசை காட்டும் கருவியொன்றை அட்டை அல்லது தகரத்தில் செய்து, ஓர் மூங்கிலைக் கீழே நட்டு, அதன் நுனியில் இக்கருவியைக் கட்டி, அது சுற்றுவதைப் பிள்ளைகளுக்குக் காண்பிக்கவும்).

பயிற்சி

1. காற்று நமக்கு எவ்விதம் உபயோகப்படுகிறது?

2. காற்று எந்தத் திசையை நோக்கி வீசுகின்ற தென்பதை எப்படியறிந்து கொள்ளலாம்?

ஐந்தாம் பாடம்

தண்ணீர் நீராவியாகுதல்

சிறுவர்களே, உங்கள் வீட்டில் சோறு சமைப்பதற்காக உலை வைக்கிறார்கள் அல்லவா? அதாவது ஓர் பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி, அதை அடுப்பின் மேல் வைத்து, அடுப்பில் நெருப்பிட்டு எரிக்கிறார்கள் அல்லவா? கொஞ்ச நேரத்துக்குப் பிறகு என்ன நடக்கிற தென்பதைக் கவனித் திருக்கிறீர்களா? பாத்திரத்தின்மீது படும் நெருப்பின் உஷ்ணம் அதிகரிக்கவே, பாத்திரத்திலிருந்து ஓர் புகை கிளம்புகிறது. இந்தப் புகைக்கு நீராவி என்று பெயர்.



உஷ்ணம் இன்னும் அதிகரித்துக் கொண்டே போனால் கொஞ்ச நேரம் பொறுத்துப் பாத்திரத்தில் தண்ணீரே இல்லாமல் போய்விடுகிறது. அவ்வளவு தண்ணீரும் எங்குப் போயிற்று? எல்லாம் நீராவியாகப் போய்க் காற்றில் கலந்துவிட்டது.

இவ்விதமே, சூரிய உஷ்ணத்தினால் கடல், ஆறு, ஏரி ஆகிய இவைகளில் உள்ள தண்ணீர் ஆவியாக மாறுகிறது. வெயிற் காலத்தில் ஏரி, குளம் முதலியவை வறண்டு போவதற்கு இது ஒரு முக்கிய காரணம்.

பயிற்சி

1. ஆறு, குளங்களிலுள்ள தண்ணீர் வற்றிப் போவதின் காரணம் என்ன?

2. அடுப்பின் மீது ஒரு பாத்திரத்தில் தண்ணீர் விட்டுக் காய்ச்சினால் மேலே என்ன தெரியும்? அதற்குப் பெயர் என்ன?

ஆறும் பாடம்

மழையும் அதன் செய்கையும்

ஓர் கெட்டிலில் தண்ணீர் ஊற்றி, அதை அடுப்பின்மீது வைத்துக்காய்ச்சினுல், கொஞ்ச நேரம் சென்றதும், கெட்டிலின் மூக்கிலிருந்து நீராவி வரும்.



அதற்கு நேராக ஓர் சிலேட்டைப் பிடியுங்கள். கொஞ்ச நேரம் பொறுத்துச் சிலேட்டைக் கவனித்துப்பார்த்தால், அதில் துளி துளியாகத் தண்ணீர் காணப்படும். இந்தத் தண்ணீர் எங்கிருந்து வந்தது? கெட்டிலிலுள்ள தண்ணீர் நீராவியாக மாறிற்று அல்லவா? சிலேட்டைத் தொட்டால் அது மிகவும் குளிர்ச்சியாக இருக்கும். ஆகையால் குளிர்ச்சியான சிலேட்டில் நீராவி பட்டவுடன் அது தண்ணீர்த் துளிகளாக மாறி விட்டது.



அதேமாதிரி சூரியனுடைய உஷ்ணத்தினுல் ஆறு, ஏரி, கடல் ஆகிய இவைகளில் உள்ள தண்ணீர் நீராவியாக மாறி, மேலே சென்று மேகமாக மாறுகிறது. மேகங்கள் ஆகாயத்தில் வேகமாகச் செல்வதைக் கவனித்திருக்கிறீர்களா? இதற்குக் காரணம் அவை காற்றினுல் அடித்துக்கொண்டு போகப் படுவதே யாகும். அவை மேலே செல்லும் பொழுது அவைகளின் மேல் குளிர்ந்த காற்றுப் படுகிறது. அப்பொழுது, அவை மழையாகப் பூமியில் விழுகின்றன.

மலையுச்சிகளும் மர மடர்ந்த காடுகள்உள்ள இடங்களும் குளிர்ச்சியாக இருக்கும். ஆதலால் அங்கே மழை அதிகமாகப் பெய்கிறது. இப்படி விழும் மழையை ஓர் கருவியினுல் அளப்பது வழக்கம். அக்கருவிக்கு



மழை மானி

'மழை மானி' என்று பெயர். அப்படி அளந்து, ஓர் இடத்தில் இவ்வளவு அங்குலம் மழை பெய்கிறது என்று சொல்லுவ துண்டு. அதையே சிலர் இவ்வளவு "சுழி" அல்லது "செவி" மழை என்றும் சொல்லுவார்கள்.

பூமியின் மேல் மழையாக விழும் தண்ணீர் என்னவாகிறது? மழை நின்றவுடன் நாம் வெளியே சென்று பார்த்தால் இதை யறியலாம். பள்ள

மாயிருக்கும் இடங்களில் தண்ணீர் தேங்கிச் சிறு குட்டைகளாகக் காணப் படுகிறது. மேட்டுப் பிரதேசங்களில் பெய்யும் மழைத் தண்ணீர் பள்ளங் களை நோக்கிச் சிறு கால்வாய்களாக ஓடுகிறது. அப்படி ஓடும் பொழுது வழியிலுள்ள மண் முதலியவைகளை அறுத்துச் செல்வதால், தண்ணீர் ஓடுமிடம் சற்றுப் பள்ளமாகி விடுகி றது. பல சிறு கால்வாய்கள் ஒன்றுகச் சேர்ந்து ஓர் பெரிய கால்வாயாக ஓடு கிறது. இரண்டு கால்வாய்கள் ஒன்று சேருமிடத்தில், தண்ணீர் வற்றிய வுடன் விசிறிபோல் ஓர் மணல் மேடு இருப்பதைக் காண்கிறேம். இங்குக் கால்வாய் பல பிரிவுகளாகப் பிரிகின் றது. இதற்கு "டெல்டா" என்றுபெயர்.

மழை நமக்கு அதிக உபயோக மானது. மழையினுல் ஆறு, குளங் கள் ஆகிய இவைகளில் தண்ணீர் நிறைகிறது. அத் தண்ணீர் பயிர் செய்ய உபயோகப் படுகிறது. பயிர்த் தொழில் விருத்தி யடைந்தால் ஜனங் கள் சந்தோஷமாக வாழ முடியும். மழையினுல் நமக்குச் சாப்பிடுவதற் கும், குளிப்பதற்கும் தண்ணீர் கிடைக் கிறது.

(உபாத்தியாயருக்குக் குறிப்பு:—மழை பெய்தவுடன் குழந்தைகளை வெளியே அழைத்துச் சென்று, மேலே சொன்ன விஷ யங்களை விளக்கிக் காட்டவும்).

பயிற்சி

1. மேகம் என்பது என்ன ?
2. மழை எவ்வாறு உண்டாகிறது ?
3. தண்ணீர் எவ்விதம் ஓடுகிறது ?
4. மழையை எந்தக் கருவியினுல் அளக்கிறேம் ?
5. டெல்டா என்றுல் என்ன ?
6. மழையினுல் நமக்கு என்ன உப யோகம் ?

ஏழாம் பாடம்

கடலும் கடற் பிரயாணமும்

கடல் என்பது ஓர் பெரிய நீர் நிலை. இது எல்லா நாடுகளையும் சுற்றி வியாபித்திருக்கிறது. இதன்



எதிர்க்கரை நம் கண்ணுக்குத் தெரிவ தில்லை. இதிலிருக்கும் தண்ணீர் அதிக உப்பாக இருக்கும். எனவே அதை நாம் சாப்பிடவாவது, பயிர் களுக்குப் பாய்ச்சவாவது முடியாது. சில இடங்களில் இத்தண்ணீரைப் பாத்திகளில் பாய்ச்சி, பல தினங்கள் அப்படியே விட்டு வைக்கிறுர்கள். சூரிய வெப்பத்தினுல் தண்ணீர் ஆவி யாகப் போன பிறகு, பாத்தியில் உப்புத் தங்கிவிடுகின்றது. இதை உடைத் துக் கோணிகளில் கட்டி, கடை களுக்கு அனுப்புகிறுர்கள்.

கடல் அதிக ஆழமாக இருப்ப தால், அதன் தண்ணீர் நம் கண் ணுக்கு நீல நிறமாகத் தோன்று கிறது. கடற்கரை பெரும்பாலும் மணற் பாங்கானது கரையின் மீது எப்போதும் அலைகள் மோதிக்கொண் டே இருக்கின்றன. அதனுல் கடற் கரை அரிக்கப்பட்டு, வளைகுடா, விரி குடா, தீவு, பூசந்தி, ஜலசந்தி முதலி யன உண்டாகின்றன.

கடலில் பலவித மீன்கள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றைப் பிடிப்பதற்காக, செம்படவர்கள் சிறு



படகு

படகுகளில் ஏறிக்கொண்டு கடலில் வெகு தூரம் செல்கிறார்கள்; சில சமயங்களில் பல மரத் துண்டுகளை ஒன்றாகக் கட்டி, அவைகளிலும் மீன் பிடிக்கச் செல்கிறார்கள். இதற்குக் 'கட்டு மரம்' என்று பெயர்.



கட்டுமரத்தில் ஏறி மீன் பிடித்தல்

ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்கு ஜனங்கள் செல்லுவதற்கும், சாமான்களை ஏற்றிச் செல்லுவதற்கும் கப்பல்கள் உபயோகப்படுகின்றன. முற்காலங்களில் கப்பல்க



பாய்க் கப்பல்

ளில் பெரிய பாய்மரங்களைக் கட்டுவார்கள். காற்று, பாய்களின்மேல் வீசும் போது கப்பல் நகர்ந்து செல்லும். ஆனால் இதில் பிரயாணம் செய்வோர் விரும்பிய இடங்களை அடைவதற்குப் பல மாதங்கள் பிடிக்கும்.

இக்காலத்தில் ரயில் வண்டிகள் நீராவியினால் செல்வதுபோல், கப்பல்களும் நீராவியினால் செல்கின்றன. இதோ பாருங்கள் நீராவிக் கப்பல். இதனால் அதி சீக்கிரம் பிரயாணம் செய்ய முடிகின்றது.



நீராவிக் கப்பல்

இப்பொழுது நமது தேசத்துக்கு அயல் நாடுகளிலிருந்து வரும் சாமான்கள் நீராவிக் கப்பலிலேயே வருகின்றன. நம் நாட்டிலிருந்து அயல் நாடுகளுக்கு அனுப்பும் சாமான்களும் இதன் மூலமாகவே அனுப்பப்படுகின்றன.



துறைமுகம்

கடற்கரை ஓரமாக அதிக ஆழமாகவும் பத்திரமாகவும் உள்ள இடத்

திற்குத் துறைமுகம் என்று பெயர். இவ்விடத்தில் கப்பல்கள் வந்து தங்குவதற்கும், அதில் சாமான்கள் ஏற்றுவதற்கும், ஜனங்கள் ஏறுவதற்கும், அதிலிருந்து ஜனங்கள் இறங்குவதற்கும், சாமான்கள் இறக்குவதற்கும் வசதியாகத் துறைமுகம் கட்டப்பட்டிருக்கிறது. கடலில் உண்டாகும் பெரிய அலைகள் துறைமுகத்திற்குள் வாரா. புயல் காற்றினால் கப்பல்களுக்குச் சேதமும் உண்டாகாது. எனவே இங்கு வியாபாரம் விசேஷமாக நடக்கின்றது.


தீப ஸ்தம்பம்

இரவில் கப்பல்கள் பிரயாணம் செய்யும் போது துறைமுகம் தெரிவதற்காக, தீபஸ்தம்பங்கள் கட்டியிருக்கிறார்கள். இரவு நேரங்களில் அவைகளில் விளக்குகள் பிரகாசமாக எரிகின்றன. கடலின் மத்தியிலும் சில இடங்களில் பாறைகள் இருக்கின்றன. கப்பல்கள் அவைகளில் மோதினால் உடைந்து போகுமல்லவா? ஆகவே இரவு நேரங்களில் பாறைகள் இருப்பது கப்பலோட்டிகளுக்குத் தெரிவதற்காக, அப்பாறைகளிலும் தீபஸ்தம்பங்கள் கட்டியிருக்கிறார்கள்.

(உபாத்தியாயருக்குக் குறிப்பு:— கடல், துறைமுகங்கள், தீபஸ்தம்பங்கள், கட்டுமரம், பாய்மரக் கப்பல், நீராவிக் கப்பல், அக்கப்பலின் உட்பாகம், கப்பலில் சாமான்கள் ஏற்றுதல், இறக்குதல் முதலிய படங்களைச் சேகரித்துப் பிள்ளைகளுக்குக் காண்பிக்கவும்).

பயிற்சி

1. கடலில் உள்ள தண்ணீர் நாம் சாப்பிடவும் வயல்களுக்குப் பாய்ச்சவும் உபயோகமாவதில்லை; ஏன்?

2. கடலிலிருந்து உப்பு எப்படிச் செய்கிறார்கள்?

3. முற்காலத்தில் கப்பல்கள் எப்படிப் பிரயாணம் செய்தன? இக்காலத்தில் எப்படிப் பிரயாணம் செய்கின்றன?

4. துறைமுகம் என்றால் என்ன ?

5. தீபஸ்தம்பங்களின் உபயோகம் என்ன?

எட்டாம் பாடம்

கிராமமும் நகரமும்

(இரண்டு பிள்ளைகளுக்குள் சம்பாஷணை)

சீனிவாசன்:- கோபாலா, இவ்வருஷம் கோடை விடுமுறைக்கு நீ கட்டாயம் எங்கள் ஊருக்கு வரவேண்டும்.

கோபாலன்:—உங்கள் ஊருக்கா! அது சிறு கிராமமாயிற்றே. அங்கு விநோதம் ஒன்றும் இருக்காதே; எப்படிப் பொழுது போகும்?

சீ:—ஓகோ! நீ அவ்விடம் ஒரு தடவை வந்து பார்த்தால், பிறகு அதன் அருமையையறிந்து கொள்வாய். எங்கள் கிராமம் உங்கள் நகரத்தைவிட மிகவும் சிறந்ததே.

கோ:—அடேயப்பா! உங்கள் கிராமத்தில் அப்படிச் சிறந்தவைகள் என்ன இருக்கின்றன? எங்கள் நகரத்தைப் பார். எவ்வளவு பெரிய வீடுகள்! விசாலமான தெருக்கள், எத்தனை விதமான வாகனங்கள்! ஒற்றை

மாட்டுவண்டி, சைக்கில்வண்டி, ஜட்கா வண்டி, கோச்சு வண்டி, மோட்டார் கார், மோட்டார் பஸ்ஸுகள் இருக்கின்றனவே! சற்று நேரம் இவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தாலும் பொழுது போய் விடுமே!



கிராமம்

சீ:—எங்கள் கிராமத்தில் இவை இல்லை தான். கிராமத்திலுள்ளவர்களுடைய தொழில் விவசாயம் மட்டும்தான். அவர்களுக்கு வருமானம் குறைவு. அவர்கள் ஏழைகள்; சிறுவீடுகள் தான் கட்டிக்கொண்டிருப்பார்கள். ஆனாலும் நெருக்கமாகக் கட்டப்பட்டுள்ள பெரிய வீடுகளுக்குப் பதிலாகக் காற்றோட்டமாயும் ஒன்றுக்கொன்று இடைவெளி விட்டும் கட்டப்பட்டுள்ள பல சிறு வீடுகள் இருக்கின்றன. தெருவில் மாட்டு வண்டிகள் மட்டும் தான் செல்கின்றன. ஆனால் இவை உங்கள் நகரத்து வாகனங்களைப் போல, சதா ஓடிக்கொண்டு சத்தத்தையும், புழுதியையும் கிளப்பி விட்டுத் தேக சுகத்தைக் கெடுக்கவில்லையே!

கோ:— எங்கள் நகரங்களில் தெருக்கள் எவ்வளவு சுத்தமாயிருக்கின்றன தெரியுமா? கிராமங்களில் சுகாதார முறைகளை யனுசரிக்காமல், கண்ட இடங்களில் குப்பை, கூளங்களைப் போட்டு, அசுத்தமாக்கி விடுகிறார்களே.

சீ:— கிராமங்களில் சுகாதாரக் குறைவு சற்று இருந்தது வாஸ்தவமே. ஆனால் ஜனங்கள் இப்பொழுது சுகாதாரமின்மையின் தீங்குகளைத் தெரிந்து கொண்டு, தக்க முயற்சிகள் எடுத்து வருகிறார்களே. துரைத்தனத்தாரும் இப்பொழுது கிராம முன்னேற்றத்திற்காகப் பலவாறு பாடுபட்டு வருகின்றனர். ஆகையால் கூடிய சீக்கிரம் கிராமங்கள் இவ்விஷயத்தில் சீர் திருத்தமடைந்துவிடும். தவிர, கிராமங்களில், அழகான பயிர் பச்சைகளையும், சூரிய உதயம், அஸ்தமனம் முதலிய காட்சிகளையும், பக்ஷிகள் இனிமையாகப்பாடுதல் முதலிய இயற்கையழகையும் அனுபவிக்கலாமே. நகரங்களில் இது முடியுமா?



நகரம்

கோ:— நகரங்களில் இயற்கையழகு இல்லாவிட்டால் செயற்கையழகு இருக்கின்றதே. சாயங்கால

நேரத்தில் காற்று வாங்க, "பார்க்" என்ற சிங்காரத் தோட்டங்கள் இருக்கின்றனவே. அவற்றில் "ஒலி பரப்பி" என்ற விசித்திரமான கருவியமைத்து, பல இடங்களிலிருந்து இனிமையான சங்கீதம், பல நாடுகளிலிருந்து வர்த்தமானங்கள், விலைவாசிகள் ஆகிய இவற்றைக் கேட்க வசதி செய்திருக்கிறார்களே! இரவு நேரங்களில் மின்சார சக்தியினால் விளக்குகள் ஏற்றியிருப்பதைக் காண வெகு அழகாயிருக்குமே! சந்தோஷமாகப் பொழுது போக்கச் சினிமா, டிராமா ஆகிய இவைகளும், குடிக்க நல்ல தண்ணீர்க் குழாய்களும், அறிவை விருத்தி செய்து கொள்ள உயர்தரக் கலா சாலைகள், வாசக சாலைகள் முதலியனவும் இருக்கின்றனவே. தவிர நோயாளிகளுக்காக வைத்திய சாலைகளும், ஜனங்கள் வழக்குகளைத் தீர்க்கக் கச்சேரிகளும் இருக்கின்றன.

சி:—வாஸ்தவமே. ஆனால் மின்சார விளக்குகளின் அதிக வெளிச்சத்தாலும், சினிமா காட்சிகளைப் பார்ப்பதாலும் சீக்கிரம் கண்கள் கெட்டுவிடுகின்றனவே. எங்கள் கிராமங்களில் காலை, மாலை வேளைகளில் வயற் புறங்களில் உலாவி, பசுமையான பயிர், செடி முதலியவைகளைப் பார்ப்பதால் கண்ணுக்குக் குளிர்ச்சியும், உடம்பிற்கு ஆரோக்கியமும் ஏற்படுகின்றனவே.

கோ:—நகரத்திலுள்ள ஜனங்கள் எப்பொழுதும் சுறுசுறுப்புள்ளவர்களாக இருக்கிறார்களே. கிராமத்தவர்கள் வருஷத்தில் பல நாட்களில் சோம்பலாகக் காலங் கழிக்கிறார்களே! நகரத்தவர்கள் கிராமத்தவர்களுக்கு வேண்டிய துணிகள், கண்ணாடிச் சாமான்கள், புத்தகங்கள் முதலியன செய்து அனுப்பா விட்டால் அவர்கள் என்ன செய்வார்கள்?

சி:—பயிரிடும் நாட்களில் ஆண், பெண், குழந்தைகள் ஆகிய எல்லோரும் கிராமங்களில் அதிக சுறுசுறுப்பாயிருக்கிறார்களே. மற்ற நாட்களிலும் அவர்கள் ஏதாவது ஒரு தொழிலை நடத்தும்படி சர்க்கார் முயற்சித்து வருகிறார்கள். உங்கள் நகரவாசிகளுக்கு வேண்டிய ஆகாரம் முக்கியமாகக் கிராமங்களிலிருந்து வருகிறதென்பதை நீ மறக்கக் கூடாது. மேலும், நீங்கள் துணிகள் நெய்யப் பஞ்சும் கிராமங்களிலிருந்தே வருகிறது. எனவே, நாங்கள் உழைக்கா விட்டால் நீங்கள் வாழ முடியாது. மேலும் நாள் முழுதும் வெளிகளில் உழைத்து, சுத்தமான காற்றையும், சாதாரண ஆகாரத்தையும், சுத்த நீரையும் உட்கொண்டு கிராம வாசிகள் நோயற்று எவ்வளவு பலசாலிகளாயிருக்கிறார்கள்! நகர வாசிகள் வீடுகளிலேயே அடைபட்டு, புழுதியையும், சாக்கடை நாற்றம் கலந்த காற்றையும், பலவித ஆகாரங்களாகிய காப்பி, தேயிலை முதலியவற்றையும் உட்கொண்டு, நோய்வாய்ப்பட்டுப் பொதுவாகப் பலவீனர்களாயிருக்கின்றனரே தெரியாதா?

கோ:—வாஸ்தவமே. யோசிக்குமிடத்து, கிராமமும் நகரமும் வெவ்வேறு விதங்களில் சிறந்தவைகளே. தேசம் முன்னேற்றமடைய ஒன்றுக்கொன்று ஒத்துழைத்தல் அவசியமே. நான் விடுமுறை நாட்களில் அவசியம் உன்னுடன் கிராமத்திற்கு வந்து, அங்குள்ள காட்சிகளைக் கண்டு களிக்கிறேன். வந்தனம்.

சி:—சந்தோஷம். வந்தனம்.

(உபாத்தியாயருக்குக் குறிப்பு:— கிராமம், நகரம் ஆகிய இவற்றைக் குறித்துப் பிள்ளைகளை அதிகமாகச் சம்பாஷணை செய்யும்படி செய்யவேண்டும்).

பயிற்சி

1. கிராமத்தில் வசிப்பவர்களின் முக்கியமான தொழில் யாது?

2. பட்டணத்திற்கும் கிராமத்திற்கும் உள்ள வித்தியாசத்தைச் சொல்லு.

3. கிராமவாசிகளின் வீடு எவ்வாறு உள்ளது?

4. பட்டணத்தில் என்னென்ன வண்டிகளைக் காணலாம்?

ஒன்பதாம் பாடம்

எங்கு, எவ்விதம் நகரங்கள் உண்டாகின்றன?

நகரங்களில் உள்ள ஜனங்களின் முக்கியமான தொழில்கள் வியாபாரமும் பலவிதக் கைத்தொழில்களும் ஆகும்.

சாதாரணமாக, பல சாலைகள், இருப்புப் பாதைகள் சந்திக்குமிடத்தில் நகரங்கள் ஏற்படுகின்றன. ஏனெனில் பல திக்குக்களிலிருந்தும், ஜனங்கள் வியாபாரத்திற்கும் கைத்தொழிலுக்கும் அங்கு வந்து கூடுகின்றனர்.

கடற்கரைக்கு அருகில் ஆழமாகவும் பத்திரமாகவும் உள்ள இடங்களில் துறைமுகங்கள் ஏற்படுகின்றன என்று படித்தோமல்லவா? அங்கு வெளி நாடுகளிலிருந்து கப்பல்கள் வந்து சேருவதால், வியாபாரம் விருத்தியடைகிறது. எனவே அவ்விடங்களிலும் நகரங்கள் ஏற்படுகின்றன.

ஆற்றங்கரைகளிலும் நகரங்கள் ஏற்படுகின்றன. ஏனெனில் இப்பிரதேசம் செழிப்பா யிருப்பதோடு, குடிப்பதற்குத் தண்ணீர் சுலபமாகக் கிடைக்கிறது. போக்கு வரவு மார்க்கங்களும் சுலபமாயிருக்கும்.

பெரிய கோயில் முதலியவைகள் உள்ள புண்ணிய ஸ்தலங்களும் நகரங்களாக விருத்தி யடைகின்றன. ஏனென்றால் சுவாமி தரிசனம் செய்யவும் திருவிழாக்கள் பார்க்கவும் ஜனங்கள் அங்கு வந்துகொண்டே யிருப்பார்கள்.

பல கைத்தொழில்கள் நடக்குமிடங்களும் பெரிய நகரங்களாக ஆகின்றன.

பயிற்சி

1. நகரங்கள் எங்கே உண்டாகின்றன?

2. துறைமுகங்களில் நகரங்கள் உண்டாவது ஏன்?

3. புண்ணிய ஸ்தலங்கள் நகரங்கள் ஆவது ஏன்?

பத்தாம் பாடம்

கிராமங்களிலும் நகரங்களிலும் ஜனங்களின் வாழ்க்கையிலுள்ள வித்தியாசங்கள்

கிராமத்தைச் சுற்றிப் புல்வெளிகளும் வயல்களும் விசேஷமாக இருக்கின்றன அல்லவா? இதனால் கிராமத்தில் வசிக்கும் ஜனங்களில் பெரும்பாலோர் பயிரிடுதல், ஆடு மாடுகள் மேய்த்தல் முதலிய தொழில்களை நடத்துபவர்களாகவே இருக்கிறார்கள். இவர்கள் வாழ்க்கையும் ஆடம்பரமில்லாதது. பயிர்த் தொழிலுக்கு வேண்டிய கலப்பை முதலியவை

செய்யத் தச்சர்களும், மண்வெட்டி, அரிவாள் முதலியவைகள் செய்யக் கருமார்களும் இருப்பார்கள். இவர்களைத் தவிர, நாவிதர்கள், வண்ணார், தட்டார், குயவர் ஆகிய இவர்களும் இருப்பார்கள். இவர்களின் தொழில்கள் என்ன? சில கிராமங்களில் துணி நெய்யச் சேணியர்களும் இருப்பார்கள். நிலத்தை உழுது நாற்று நடுங்காலத்திலும், அறுவடைக் காலத்திலும் அவர்களுக்கு வேலை அதிகம். மற்ற நாட்களில் அவர்களுக்கு அதிக வேலை கிடையாது. கிராம தேவதைகளின் திருவிழாக் காலத்திலும் சங்கராந்தி (பொங்கல்) காலத்திலும் அவர்கள் அதிக உற்சாகமும் சந்தோஷமுமுள்ளவர்களாக இருப்பார்கள்.

நகரங்களில் வசிப்பவர்கள் பல தொழில்களை நடத்துபவர்களாக இருக்கிறார்கள். சிலர் ஆபீசுகளில் உத்தியோகஸ்தர்களாகவும், சிலர் வியாபாரிகளாகவும், சிலர் பெரிய கைத்தொழில்களை நடத்துபவர்களாகவும் இருப்பார்கள். சிலர் ஹோட்டல்கள் வைத்தும், சிலர் வண்டி, மோட்டார் ஆகிய இவற்றை ஓட்டியும், சிலர் தையல் வேலைகள் செய்தும் பிழைக்கிறார்கள். நகரத்திலுள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் ஆடம்பர வாழ்க்கையையே நடத்துபவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எக்காலத்திலும் பொதுவாகச் சுறுசுறுப்புள்ளவர்கள்.

பயிற்சி

1. கிராமத்தில் வசிக்கும் ஜனங்களின் முக்கியமான தொழில்கள் எவை?

2. நகரங்களில் வசிக்கும் ஜனங்களின் முக்கியமான தொழில்கள் எவை?

3. நகரவாசிகள் எவ்வித வாழ்க்கையுள்ளவர்கள்?


நிலக்கடலை


கம்பு


சோளம்


கேழ்வரகு

பதினோராம் பாடம்

உள்ளூரில் விளையும் அறுவடைத் தானியங்கள்

உங்கள் ஊரைச் சுற்றிலும் வயல்கள் இருக்கின்றன அல்லவா? இவற்றில் பலவிதமான பயிர்கள் உண்டாகின்றன. நெல், வாழை, கரும்பு முதலியன விளையும் நிலத்திற்கு நன்செய் நிலமென்றும், கம்பு, சோளம், கேழ்வரகு முதலியவை விளையும் நிலத்திற்குப் புன்செய் நிலமென்றும் பெயர். நன்செய் நிலங்களுக்குச் சத்து உண்டாக்கச் சாம்பல், குப்பை, சாணி, தழைகள் முதலியவைகளை எருக்களாகப் போடவேண்டும். ஆறுகள், ஏரிகள்,

சேலம் ஜில்லாவின் விளை பொருள்களும், அவைகள் பயிர் செய்யப்படும் மாதங்களும்

ஜனவரி	பிப்ரவரி	மார்ச்	ஏப்ரல்	மே	ஜூன்	ஜூலை	ஆகஸ்டு	செப்டம்பர்	அக்டோபர்	நவம்பர்	டிசம்பர்
நெல்	நெல்	நெல்	நெல்	நெல்	நெல்	நெல்	நெல்	நெல்	* நெல்	* நெல்	நெல்
சோளம்	சோளம்	சோளம்	சோளம்		சோளம்	சோளம்	* சோளம்	சோளம்	சோளம்	சோளம்	சோளம்
கேழ்வரகு				கேழ்வரகு	கேழ்வரகு	* கேழ்வரகு	* கேழ்வரகு	கேழ்வரகு	கேழ்வரகு	கேழ்வரகு	கேழ்வரகு
				கம்பு	* கம்பு	கம்பு	கம்பு	* கம்பு	கம்பு	கம்பு	
		நிலக்கடலை	நிலக்கடலை	நிலக்கடலை	நிலக்கடலை	* நிலக்கடலை	* நிலக்கடலை	நிலக்கடலை	நிலக்கடலை	நிலக்கடலை	
எள்ளு		எள்ளு	எள்ளு	* எள்ளு	எள்ளு	* எள்ளு	எள்ளு	எள்ளு			எள்ளு
								கொள்ளு	* கொள்ளு	* கொள்ளு	கொள்ளு
* கரும்பு	கரும்பு	கரும்பு	* கரும்பு	கரும்பு	கரும்பு						
						பருத்தி		* பருத்தி	பருத்தி	பருத்தி	
புகையிலை	புகையிலை		புகையிலை	புகையிலை	புகையிலை	புகையிலை	புகையிலை	* புகையிலை	புகையிலை	புகையிலை	புகையிலை

* இக்குறிப்புள்ளவை அந்த மாதங்களில் விசேஷமாய் விளைகின்றன

குளங்கள், கிணறுகள் ஆகிய இவைகளிலிருந்து, கால்வாய்கள் வழியாக வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நன்செய்ப் பயிர்களுக்கு எப்பொழுதும் தண்ணீர் வேண்டும். சாரமுள்ள களிமண் பூமியில் நன்செய்ப் பயிர்கள் விசேஷமாக உண்டாகின்றன.

புன்செய் நிலங்களில் கம்பு, சோளம், கேழ்வரகு, நிலக்கடலை, எள், உளுந்து, பயறு, துவரை முதலிய தானியங்கள் விளைகின்றன. இவைகள் சாதாரணமாக மேட்டுப்பாங்கான இடத்தில் பயிரிடப்படுகின்றன. இவைகளுக்குத் தண்ணீரும் அதிகமாக வேண்டியதில்லை. செம்மண், மணல் கலந்த மண்ணில் இவைகள் விசேஷமாகப் பயிராகின்றன. கம்பு, சோளம், கேழ்வரகு ஆகிய இவைகள் ஏழை ஜனங்களுக்கு ஆகாரமாக உபயோகப்படுகின்றன. நிலக்கடலை, எள் ஆகிய இவைகளிலிருந்து எண்ணெய் எடுக்கிறார்கள்.

நமது ஜில்லாவில் நெல், சோளம், கேழ்வரகு, கம்பு, வரகு, சாமை ஆகிய தானியங்களும், நிலக்கடலை, எள்ளு ஆகிய எண்ணெய் வித்துக்களுப், பயறுகளும், கரும்பு, கொள்ளு, புகையிலை முதலியவைகளும் பயிர் செய்யப்படுகின்றன. அவைகள் ஒவ்வொன்றும் பயிர் செய்யப்படும் மாதங்களின் விவரங்களை 14ம் பக்கத்திலுள்ள அட்டவணையிற் காண்க:—

பயிற்சி

1. புன்செய்ப் பயிர்கள் எவை? நன்செய்ப் பயிர்கள் எவை ?

2. உங்கள் கிராமத்தில் என்னென்ன தானியங்கள் விளைகின்றன?

3. நன்செய் விவசாயத்துக்குச் செய்ய வேண்டியதென்ன ?



ஒற்றை மாட்டு வண்டி



இரட்டை மாட்டு வண்டி



குதிரை வண்டி



மோட்டார்



மோட்டார் பஸ்



மோட்டார் லாரி

பன்னிரண்டாம் பாடம்

போக்கு வரவு மார்க்கங்கள்

சாதாரணமாக ஒரு கிராமத்திலிருந்து, சமீபத்திலுள்ள மற்றொரு கிராமத்திற்குப் போகவேண்டியிருந்தால், நடந்து செல்லுகிறோமல்லவா? இப்படியே ஜனங்கள் நடந்து நடந்து பாதை தேய்ந்து போகிறது. இதற்கு ஒற்றையடிப் பாதை என்று

பெயர். சற்றுத் தூரத்திலுள்ள கிராமத்துக்குப் போகவேண்டியிருந்தால் ஒற்றை மாட்டு வண்டியிலாவது, இரட்டை மாட்டு வண்டியிலாவது போகிறோம். வண்டிகள் போவதற்குச் சாலைகள் போட்டிருக்கிறார்கள். பெரும்பாலும் கிராமங்களில் மண் சாலைகளே போடப்பட்டுள்ளன.

நகரங்களில் மாட்டுவண்டிகளைத் தவிர, குதிரை வண்டிகளையும் காண்கிறோம். இவைகளைத் தவிர, மோட்டார் வண்டிகளும் இருக்கின்றன. மோட்டார் வண்டிகளில் பல மனிதர்களை ஏற்றிச் செல்லும் மோட்டார் பஸ்களும், சாமான்களை ஏற்றிச் செல்லும் மோட்டார் லாரிகளும் இருக்கின்றன. இங்கே கப்பிகளாலும், கற்களாலும் சாலைகள் கெட்டியாகப் போடப்பட்டுள்ளன.

விரைவில் அதிக தூரம் பிரயாணம் செய்ய ரயில் வண்டிகள் இருக்கின்றன. நீங்கள் ரயில் வண்டியில் பிரயாணம் செய்திருக்கிறீர்களா? ரயில் வண்டிகள் ஒரே சமமாகவுள்ள தரையில் போடப்பட்டிருக்கும் நீண்ட இருப்புப் பாதைகள்மேல் நீராவியின் உதவியால் அதிவேகமாக ஓடுகின்றன. ஓடும் சக்தியுள்ள இயந்திரம் இருக்கும் வண்டிக்கு எஞ்சின் என்று பெயர்.

ஆறுகளில் வெள்ளம் வரும்போது சௌகரியமாய்ப் பிரயாணம் செய்வதற்குப் பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்குச் செல்லும் பொழுது மத்தியில் கடல் இருந்தால், அதைக் கப்பலால் கடந்து செல்கிறோம்.

இக்காலத்தில் அதி வேகமாக வெகு தூரங்களுக்குச் செல்ல ஆகாய விமானங்கள் இருக்கின்றன. நீங்கள் ஆகாய விமானம் பார்த்திருக்கிறீர்களா? உங்கள் ஊருக்குமேல் எப்



ஆகாய விமானம்

பொழுதாவது ஆகாய விமானம் பறந்து செல்வதைக் கவனித்திருக்கிறீர்களா? ஆகாய விமானங்கள் மணிக்கு நூறு மைல் வேகத்துக்கு மேல் பிரயாணம் செய்கின்றன.



தபால் ஆபீஸ்

நாம் நம் சொந்தக்காரர்களுக்காவது, நண்பர்களுக்காவது சமாசாரம் தெரிவிக்க வேண்டியிருந்தால், கடிதம் எழுதி, அதற்குத் தகுந்த தபால் பில்லை ஒட்டி, விலாசம் எழுதி, தபால் பெட்டியில் போடுகிறோம். பிறகு இரண்டொரு தினங்களில் அது குறிப்பிட்ட விலாசதாருக்குப் போய்ச் சேருகிறது. அதிக அவசரமான சமாசாரமாயிருந்தால் அதைத் தந்தி மூலம் தெரிவிக்கலாம்.

பயிற்சி

1. போக்குவரவு மார்க்கங்கள் எவை?
2. போக்குவரவுக்குரிய சாதனம் எவை?
3. தபாலாபீஸின் உபயோகம் என்ன?
4. சாமான்கள் வெளியூர்களுக்கு எப்படி அனுப்பப்படுகின்றன?

பதின்மூன்றும் பாடம்

சந்தை கூடுமிடம்

ஒவ்வொரு கிராமங்களிலும் அங்கிருக்கும் ஜனங்களுக்குத் தேவையான எல்லாப்பொருள்களும் கிடைக்கின்றனவா? இல்லை. ஆகையால்



சந்தை

அவர்களுக்குத் தேவையான பொருள்களை வேறு கிராமங்களிலிருந்தாவது, நகரங்களி லிருந்தாவது வரவழைத்துக்கொள்ள வேண்டி யிருக்கிறது. அதே சமயத்தில் அவர்கள் தங்கள் கிராமத்தில் அதிகமாயுள்ள பொருள்களை வேறு கிராமத்தாருக்கு விற்று விடுகிறார்கள். இம்மாதிரி ஒவ்வொருவரும் தங்களுக்குத் தேவையான பொருள்களுக்காகப் பல கிராமங்களுக்குச் செல்வதைவிட, பல கிராமத்தவர்கள் ஓர் பொதுவான இடத்திற்குத் தங்கள் பொருள்களை எடுத்து வந்தால், அவரவர்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களை அங்குச் சுலபமாக வாங்கிக் கொள்ளலாம் அல்லவா? இம்மாதிரியாக விற்பவர்களும் வாங்குபவர்களும் கூடுமிடத்திற்குச் 'சந்தை' என்று பெயர்.

சந்தை கூடுமிடம் பல கிராமங்களுக்கு மத்தியில் இருந்தால், ஜனங்கள் நான்கு பக்கங்களி லிருந்தும் வந்து சுலபமாகக் கூடுவார்கள். சந்தை கூடுமிடம் சாதாரணமாகப் பல ரஸ்தாக்கள் கூடுமிடமா யிருப்பதால், வண்டிகளும் மனிதர்களும் சுலபமாகப்போகவரக்கூடும். அநேக முக்கியமான கிராமங்களில் வாரத்துக்கு ஒரு முறை சந்தை கூடுகிறது.

சந்தைகளில் அவ்வூரைச் சுற்றியுள்ள கிராமங்களில் விளையும் உணவுப் பொருள்கள், காய், கறி, பழங்கள், சட்டி, பானைகள், துணிகள், ஆடு, மாடுகள் முதலியவைகளும் விற்கப்படும். கிராமத்தவர்கள் தாங்கள் கொண்டு போகும் சாமான்களைச் சந்தையில் விற்று விட்டுத் தங்களுக்குத் தேவையான பொருள்களைச் சந்தையில் வாங்கிச் செல்லுவார்கள்.

பயிற்சி

1. சந்தை எதற்காகக் கூடுகிறது?
2. அது எந்த இடத்தில் கூடுகிறது?
3. அது கூடுவதால் என்ன பயன்?

பதினான்காம் பாடம்

தொழிற் சாலைகள்

நமக்கு முக்கியமாய்த் தேவையானவை உணவும் உடையு மல்லவா? உணவுப் பொருள்கள் பூமியில் உற்பத்தியாகின்றன. துணிகள் நெய்ய உபயோகமாகும் பருத்தியும் பூமியில் உண்டாகின்றது. சில கிராமங்களில்



கை ராட்டினம்

வீடுகளிலேயே பருத்தியை நூலாக நூற்றுத் துணியாக நெய்கிறார்கள். ஆனால் இம்மாதிரி நெய்யும் துணிகள் எல்லா ஜனங்களுக்கும் போதா அல்லவா? ஆகவே, சில நகரங்களில் இயந்திரங்களின் உதவியால் துணி



நெசவு

கள் அதிகமாக நெய்கிறார்கள். வேறு சில நகரங்களில் நமக்குத் தேவையான பித்தளை, வெண்கலம் முதலியவற்றால் செய்த பாத்திரங்கள், இரும்புச் சாமான்கள், கண்ணாடி வகைகள் முதலியவை செய்கிறார்கள். இப்படிப்பட்ட இடங்களுக்குத் தொழிற் சாலைகள் என்று பெயர். பெரிய தொழிற் சாலைகளில் நூற்றுக் கணக்கானவர்கள் வேலை செய்வார்கள். அங்குச் சாமான்கள் இயந்திரங்களாலேயே செய்யப்



மில்

படுகின்றன. தொழிற்சாலைக்கு வேண்டிய சௌகரியங்கள் சுலபமாகக் கிடைக்கக் கூடிய இடங்களிலேயே தான் தொழிற் சாலைகள் அமைகின்றன. தொழிற் சாலையிலிருந்து சுற்றியுள்ள இடங்களுக்குப் போக்கு வரவு மார்க்கங்கள் சுலபமாயிருக்கும்.

(உபாத்தியாயருக்குக் குறிப்பு:— பிள்ளைகளை வண்டிப்பேட்டை, தபாலாபீஸ், சந்தை, சமீபத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷன், தொழிற் சாலை ஆகிய இவைகளுக்கு அழைத்துச் செல்லவேண்டும்).

பயிற்சி

1. தொழிற்சாலைகள் என்றால் என்ன? அங்குச் செய்யப்படும் சில சாமான்களைக் கூறுக.
2. மனிதர்களுக்கு முக்கியமானவை என்னென்ன?
3. துணிகள் எதனால் உண்டாகின்றன?
4. அவை எவ்வாறு உண்டாகின்றன?

பதினைந்தாம் பாடம்

படங்களும் பிளான்களும்

பிள்ளைகளே, உங்களுக்கு ஒரு சிறிய முகம் பார்க்கும் கண்ணாடியின் உருவப்படத்தை வரையத் தெரியுமா? ஓர் அடிக் குச்சியை எடுத்துக் கொண்டு அந்தக்கண்ணாடியின் நீளத்தையும் அகலத்தையும் அளந்து கொள்ளுங்கள். நீளம் 3 அங்குலம் என்றும், அகலம் $1\frac{1}{2}$ அங்குலம் என்றும் வைத்துக்கொள்ளுவோம். ஒரு காகிதத்தில் அந்தக் கண்ணாடியின் நீளத்தையும் அகலத்தையும் வைத்துப் படத்தில் காட்டியபடி ஒரு படம் வரையுங்கள். இதைப்போலவே உங்கள் புஸ்தகத்தின் நீளத்தையும் அகலத்தையும் அளந்துகொண்டு, அதன் படத்தை ஒரு காகிதத்தில் வரைந்து காட்டலாம்.



ஆனால், இவ்வாறு, மேஜை, கறுப்புப் பலகை, வகுப்பு அறைகளின் உருவங்களை வரைவதெப்படி? அவற்றின் நீள அகலங்களை அப்படியே வைத்துக்கொண்டு, காகிதத்தில் அவற்றின் படங்களை வரைய முடியாது. ஏன்? காகிதத்தைக்காட்டிலும் அந்த வஸ்துக்கள் அதிகப் பெரியவை. ஆனால் அவ்வஸ்துக்களின் நீள அகலங்களைச் சுருக்கி, அவற்றின் படங்களை வரையலாம்.

உதாரணமாக உங்கள் வகுப்பு அறையின் படத்தை வரைவதாக வைத்துக் கொள்ளுவோம். அறையின் நீளம் 30 அடி என்றும், அகலம் 15 அடி என்றும் வைத்துக்கொள். 10 அடிக்கு ஒரு அங்குலமாக 30 அடிக்கு மூன்று அங்குலக்கோடு ஒன்றும், 15 அடிக்கு 1 அங்குலக்கோடு ஒன்றும் எடுத்துக் கொண்டு, ஒரு நீண்ட சதுரம் வரைந்தால் அதுவே உங்கள் வகுப்பு அறையின்படமாகும்.

அடுத்த பக்கத்தில் ஓர் பள்ளிக்கூடத்தின் படம் வரைந்து காட்டப்பட்டிருக்கிறது பார். பள்ளிக்கூடத்தின் நீளம் 94 அடி. அகலம் 76 அடி. உன் அடிக்குச்சியை எடுத்துக் கொண்டு படத்தின் வெளிக் கோடுகளை அளந்து பார். 20 அடிக்கு ஒரு அங்குலமென்று வைத்துக்கொண்டு உன்னுடையபள்ளிக்கூடத்தின் நிலப் படம் வரையப்பட்டிருக்கிறது. இதனுள் நான்கு வகுப்பு அறைகளின் படமும் வரையப்பட்டிருக்கிறது பார். ஒவ்வொரு வகுப்பின் நீளமும் 28 அடி; அகலம் 14 அடி. படத்தில் இவைகள் எத்தனை அங்குலமாகக் காட்டப்பட்டிருக்கின்றன என்று அளந்துபார்.

பள்ளிக்கூடத்திற்குள் செல்லும் பாதையும், வகுப்பு அறைகளுக்குள் செல்லும் வாயில்களும் காட்டப்பட்டிருக்கின்றன. அடிக்குச்சியைக் கொண்டு ஒவ்வொரு வாயிலையும் அளந்து, அதன் உண்மையான அகலத்தைக் கண்டுபிடி. (அடிக்குச்சியில் ஒவ்வொரு அங்குலமும் பத்துச் சிறு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சிறு பாகமும் படத்தில் இரண்டு அடிகளைக் குறிக்கும்). அறைகளின் சுவர்களில்

ஜன்னல்களும் காட்டப்பட்டிருக்கின்றன பார். அவைகளையும் அடிக் குச்சியால் அளந்து உண்மையான அளவைக் கண்டுபிடியுங்கள்.

இதைப் போலவே ஒரு கிராமம், தாலூகா அல்லது ஒருஜில்லாப் படத்தையும் ஓர் தகுதியான அளவை வைத்துக் கொண்டு வரைந்து அதிலுள்ள ஆறுகள், மலைகள், ரயில் பாதை, ரஸ்தா மார்க்கம், முக்கிய ஊர்கள் ஆகிய இவைகளைக் குறிக்கலாம்.

கடல்களைக் குறிப்பதாயிருந்தால் நீல நிறத்தில் குறிக்க வேண்டும். மைதானங்களுக்குப் பச்சை வர்ணமும் மலைகளுக்குப் பழுப்பு வர்ணமும் உபயோகிக்க வேண்டும்.



பள்ளிக்கூடத்தின் படம்

உபாத்தியாயருக்குக் குறிப்பு:-ஜில்லாப் படம் அல்லது ராஜதானிப் படத்தைக் கொண்டு, படங்களுக்குவழக்கமாகஉபயோகப்படுத்தும் (Conventional Colour Scheme) வர்ணங்களைப் பற்றி விபரமாகச் சொல்லவும்.

அடுத்த பக்கத்திலுள்ள ஜில்லாவின் படத்தைப்பாருங்கள். அதன் அடியில் ஸ்கேல் 1 அங்குலத்துக்கு இத்தனை மைல் என்று எழுதப்பட்டிருக்கிறதல்லவா? படத்தில் 1 அங்குல தூரம் அதில் குறித்த அளவு மைல் தூரத்தைக் காட்டும். இதிலிருந்து நமக்கு அப்படத்தில் ஓரிடத்திலிருந்து மற்ரேரிடத்திற் குள்ள தூரம் எத்தனை மைல் என்று தெரியும். நமது ஜில்லாவின் தாலூகாக்கள் படத்தில் காட்டப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்.

பயிற்சி

1. ஒரு புஸ்தகத்தின் பிளானை எப்படி நீ வரைவாய்?
2. ஒரு வீட்டின் அகலம் 30 அடியும், நீளம் 60 அடியுமிருந்தால், அவ்வீட்டின் பிளானை எப்படி வரைவாய்?
3. நீ வசிக்கும் ஊரிலுள்ள ஒருபொதுவான கட்டிடத்தின் பிளானை வரைந்து காட்டு.

சேலம் ஜில்லா பூகோளம்

பதினாறாம் பாடம்

எல்லைகள்

பிள்ளைகளே, நீங்கள் வசிப்பது ......என்ற ஊர். இம்மாதிரிப்பல ஊர்கள் அடங்கிய பாகத்திற்குத் தாலுகா என்று பெயர். பல தாலுகாக்கள் அடங்கியது ஒரு ஜில்லா. அநேக ஜில்லாக்கள் கொண்டது ஒரு மாகாணம். பல மாகாணங்கள் சேர்ந்தது ஒரு தேசம்.

நாம் வசிக்கும் தேசத்திற்கு இந்தியா என்று பெயர். இந்தத்தேசத்தின் தென் பாகமாகிய தென் இந்தியாவில் சென்னை மாகாணத்தில் நாம் வசிக்கிறோம்.



தென் இந்தியாப் படம்

சென்னை மாகாணம் இந்தியாவின் தெற்கிலும் தென்கிழக்கிலும் அமைந்திருக்கிறது. இந்த மாகாணத்தின் மத்திய பாகத்தில் நாம் வசிக்கும் இடத்திற்கு சேலம் ஜில்லா என்று பெயர். இதன் தலைநகர் சேலம். இப்போது நாம் கற்றுக்கொள்ளப் போவது நமது ஜில்லாவின் பூகோளமே.

பூகோளப் பாடங்களைக் கற்றுக் கொள்வதற்கு முதன்முதலில் முக்கியமாக நாம் தெரிந்து கொள்ள வேண்டியது, நாம் படிக்கும் பாகத்தின் எல்லைகள் இன்னவை என்பதே. எல்லைகள் என்பன ஓர் இடத்தின் நான்கு திக்கிலுமுள்ள இடங்களாம்.

நமது ஜில்லாவின் படத்தைக் கவனியுங்கள். நமது ஜில்லாவுக்குக் கிழக்கே வட ஆற்காடு, தென் ஆற்காடு ஜில்லாக்களும், தெற்கே திருச்சிராப்பள்ளி ஜில்லாவும், மேற்கே கோயமுத்தூர் ஜில்லாவும், மைசூர் ராஜ்ஜியமும், வடக்கே மைசூர் ராஜ்ஜியமும், வடஆற்காடு ஜில்லாவும் எல்லைகளாக அமைந்திருப்பதைக் காண்பீர்கள்.

ஒரு ஜில்லாவானது பல தாலுகாக்களைக் கொண்டது என்று படித்தோம் அல்லவா? நம் சேலம் ஜில்லாவை ஒன்பது தாலுகாக்களாகப் பிரித்திருக்கிறார்கள். அவையாவன:— 1. சேலம், 2. ஆத்தூர், 3. நாமக்கல், 4. திருச்செங்கோடு, 5. ஓமலூர் 6. தர்மபுரி, 7. ஹோசூர், 8. கிருஷ்ணகிரி, 9. ஊத்தங்கரை. இவைகளில் நீங்கள் வசிக்கும் தாலுகா........என்பது.

பயிற்சி

1. நீங்கள் வசிக்கும் தாலுகாவின் எல்லைகளிலுள்ள ஊர்களைச் சொல்லுங்கள்.
2. உங்கள் ஊரின் எல்லைகளைக் கூறுங்கள்.
3. உங்கள் ஜில்லாவின் நான்கு திசைகளிலும் உள்ள ஜில்லாக்கள் எவை?
4. மாகாணம் என்று எதற்குப் பெயர்?
5. தாலுகா என்று எதற்குப் பெயர்?



சேலம் ஜில்லா
எல்லைகள்
தாலூகாக்கள்
மைசூர் ராஜ்யம்
ஹொசூர் தாலூகா
கிருஷ்ணகிரி
தாலூகா
பாலகாட்
பாராமஹால்
ஹரூர்
தாலூகா
காவேரி நதி
தர்மபுரி தாலூகா
ஓமலூர் தாலூகா
சேலம்
தாலூகா
ஆத்தூர்
தாலூகா
தலகாட்
திருச்செங்கோடு
தாலூகா
நாமக்கல்
தாலூகா
கோயம்புத்தூர் ஜில்லா
வட ஆற்காடு ஜில்லா
தென் ஆற்காடு ஜில்லா
ஸ்கேல்: 1 அங்குலம் — 15 மைல்
காவேரி நதி
திருச்சிராப்பள்ளி ஜில்லா

பதினேழாம் பாடம்

இயற்கை யமைப்பு

நமது ஜில்லா வடக்கிலும் மேற்கிலும் உயர்ந்தும், கிழக்கிலும் தென் கிழக்கிலும் சரிந்தும் இருக்கிறது. வடமேற்குப் பாகம் இதர பாகங்களை விட மிக உயர்ந்துள்ளது. இது மைசூர் பீடபூமியைச் சேர்ந்தது.

நமது ஜில்லா, இயற்கை அமைப்பை யொட்டி மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட் டுள்ளது. அவை:—(1) பாலகாட், பாராமஹால், (3) தலகாட்.

பாலகாட்:— இந்தப் பாகம் அதிக உயரமானது; கடல் மட்டத்திற்கு மேல் சுமார் 3,000 அடிக்கு மேல் இருக்கிறது. இதன் சீதோஷ்ண ஸ்திதி குளிர்ச்சியாயுள்ளது. இப் பிரதேசத்தில், ஹொசூர் தாலூகாவின் பெரும்பாகமும், கிருஷ்ணகிரி தாலூகாவின் வடக்கில் சிறு பாகமும் அடங்கியுள்ளன.

பாராமஹால்:— இப் பிரதேசத்தில், ஹொசூர், கிருஷ்ணகிரி தாலூகாக்களின் தெற்குப்பாகமும், ஹரூர் தாலூகாவின் பூராப்பாகமும் சேர்ந்தவை. இப் பிரதேசம் கடல் மட்டத்திற்கு மேல் 1,300 அடி உயரமுள்ளது.

தலகாட்:— சேலம், ஓமலூர், ஆத்தூர், திருச்செங்கோடு, நாமக்கல் தாலூகாக்கள் இதைச் சேர்ந்தவை. இப்பிரதேசம் நமது ஜில்லாவின் சமவெளிப்பாகம்.

மலைகள்

சேர்வாராயன் மலைதான் நமது ஜில்லாவிலுள்ள மலைகளில் மிக உயரமானது. இது சேலத்திற்கு வடக்கில் 10-மைல் தூரத்திலுள்ளது. இதன் உயரம் சுமார் 4,500 அடி. இம் மலைமீது எப்போதும் குளிர்ச்சியாகவே இருக்கும். அதன் உச்சியில் ஏர்க்காடு என்னும் அழகிய சிறு பட்டணம் உண்டு. அம் மலைக்கு வேனிற்காலத்தில் கன தனவான்கள்போய், அங்கே வசிக்கிறார்கள். இம்மலைச் சரிவில் காப்பி, தேயிலை பயிராகின்றன. இங்கே பல ஐரோப்பிய கனவான்கள் வசிக்கின்றனர்; ரோமன் கத்தோலிக் கிறிஸ்தவக் கன்னியா மடத்து ஸ்திரீகள் வசிக்க ஒரு ஸ்தலமும் இருக்கிறது.

அங்குசகிரி என்ற மலை, ஹொசூர் தாலூகாவின் வட கிழக்கில் இருக்கிறது.

மேலகிரி, தர்மபுரி தாலூகாவிற்கும் ஹொசூர் தாலூகாவிற்கும் நடுவிலுள்ள மலை.

மகாராஜகடை மலைகள் என்பவை கிருஷ்ணகிரி, ஹொசூர் தாலூகாக்களில் பரவியுள்ளன.

கல்ராயன் மலைகள். ஆத்தூர், ஹரூர் தாலூகாக்களில் இருக்கின்றன; கிழக்கே தென் ஆற்காடு ஜில்லாவிலும் பரவியுள்ளன. இவை 17 மைல் நீளமுள்ளன.

கொல்லி மலையும், பச்சை மலையின் ஒரு பிரிவும் நாமக்கல் தாலூகாவில் இருக்கின்றன. இவை 4,000 அடி உயரமுள்ளவை

இராயக்கோட்டை மலைகள் என்பவை பல குன்றுகளால் ஆகியவை,



சேலம் ஜில்லா
இயற்கையமைப்பு
ஸ்கேல்:
1 அங்குலம் = 15 மைல்.
மைசூர் ராஜ்யம்
வட ஆற்காடு ஜில்லா
தென் ஆற்காடு ஜில்லா
கோயமுத்தூர் ஜில்லா
திருச்சிராப்பள்ளி ஜில்லா
மார்கண்டநதி
மகாராஜகடை
அங்குசகிரி
ஹொசூர்
தென்பெண்ணை நதி
கிருஷ்ணகிரி
இராயக்
கோட்டைமலை
பாம்பாறு
மேலகிரி
சனத்குமார நதி
நல்லூர் நதி
ஹரூர்
வாணியாறு
காவேரிநதி
ஹொகெனகல்
நீர்வீழ்ச்சி
தர்மபுரி
பாலாறு
தொப்பூர் நதி
கல்ராயன்மலை
காவேரிநதி
ஓமலூர்
சேர்வராயன்மலை
மேட்டூர் அணை
சரபங்க நதி
சேலம்
வசிஷ்ட நதி
ஆத்தூர்
திருமணிமுத்தாறு
சுவேத நதி
பச்சைமலை
சங்ககிரி
திருச்செங்கோடு
நாமக்கல்
கொல்லிமலை
காவேரிநதி
காவேரிநதி
மலைகள்
நதிகள்

இவை கிருஷ்ணகிரித் தாலூகாவில் வட மேற்கே உள்ளன.

மேற்கூறிய மலைகளும் குன்றுகளும் தவிர இந்த ஜில்லாவில், சங்ககிரி மலை, கஞ்ச மலை, ஜெருகு மலை, போத மலைகள் முதலிய சிறிய மலைகளும் உள்ளன.

நமது ஜில்லாவிலுள்ள எல்லா மலைகளும் குன்றுகளும் கிழக்குத் தொடர்ச்சி மலையின் பிரிவுகள்தான். பண்டைக்காலத்து மன்னர்கள், இம் மலைமீது கோட்டை, கொத்தளங்களோடு வசித்து வந்தனர். அவற்றில் கிருஷ்ணகிரிக் கோட்டை, சங்ககிரிக் கோட்டை, இராயக் கோட்டை முதலியன முக்கியமானவை. ஆனல், இக்காலத்தில் அக்கோட்டைகள் பாழாய்க் கிடக்கின்றன.

காடுகள்

நமது ஜில்லாவில் ஹொசூர், தர்மபுரி, ஹரூர் தாலூகாக்களில் காடுகள் மிக அதிகம். தர்மபுரி, ஹரூர் தாலூகாக்களில் மூங்கிற் காடுகளும், புளிய மரங்களும் அதிகம்.

நதிகள்

இனி நாம் இந்த ஜில்லாவிலுள்ள முக்கிய நதிகளைப் பற்றிப் படிப்போம்.

காவேரி நதி:—இது மேற்கே வெகு தூரத்தில் உள்ள குடகு ராஜ்ஜியத்தில் உற்பத்தியாகி, மைசூர் ராஜ்ஜியத்தின் வழியாய் நமது ஜில்லாவிற்கும், கோயமுத்தூர் ஜில்லாவிற்கும் இடையில் பாய்கிறது. இது ஒரு புண்ணிய நதி. நமது ஜில்லாவிலுள்ள தொப்பூர் ஆறு, சரபங்கநதி, சனத்குமார நதி, திருமணி முத்தாறு முதலியன காவேரியின் உப நதிகள்.

அரசாங்கத்தார் மேட்டூர் என்னும் ஊருக்கு அருகில் இரண்டு குன்றுகளைச்சேர்த்து, காவேரியின் குறுக்கே ஒரு பெரிய அணை கட்டியிருக்கின்றார்கள். இந்த அணை உலகத்திலேயே மிகவும் பெரியது. அதன் காட்சி அற்புதமானது. அணையின் தேக்கம் இருக்குமிடத்தில் முன்பு சாம்பள்ளி, போத்தநேரி, நல்லா கவுண்டன்பட்டி என்ற மூன்று பெரிய கிராமங்கள் இருந்தன. மேட்டூர் அணையின் உயரம் 220 அடி. தேக்கத்தின் பரப்பு சுமார் 60 சதுர மைல். இந்த அணையின் நீரால் தஞ்சாவூர் ஜில்லாவில் 3 லக்ஷம் ஏக்கருக்கு மேல் நன்செய் சாகுபடி செய்யப்படுகிறது. இவ்வணை சேலம் ஜங்ஷனிலிருந்து 26 மைல் மேற்கில் உள்ளது. இங்கிருந்து கோயமுத்தூர், பெங்களூர், சென்னை முதலிய இடங்களுக்குச் சிறந்த ரஸ்தாக்கள் செல்லுகின்றன.

தென் பெண்ணையாறு:—இந்நதி, மைசூர் ராஜ்யத்தில் உற்பத்தியாகி. நமது ஜில்லாவில் ஹொசூர், ஹரூர் தாலுகாக்கள் மூலமாய் ஓடி, தென் ஆற்காடு ஜில்லாவில் நுழைகிறது. இந்நதியின் நீர் விவசாயத்திற்கு அதிகப் பயன்படுகிறது.

தொப்பூர் ஆறு:— சேர்வராயன் மலையில் உற்பத்தியாகி, தர்மபுரி, ஓமலூர் தாலூகாக்களின் மத்தியில் எல்லையாகப் பாய்ந்து, பிறகு காவேரியில் மேட்டூர் அணைக்கு மேலே கலக்கிறது.

சரப்பங்க நதி:— இதுவும் சேர்வராயன் மலையில் உற்பத்தியாகி, ஓமலூர் தாலூகாவின் மூலமாய்ப் பாய்ந்து காவேரியில் கலக்கிறது.

சனத்குமார நதி:—இந்நதி ஹொசூர் தாலூகாவில் உற்பத்தியாகி, தர்மபுரித் தாலூகாவின் வழியாகப் பாய்ந்து, காவேரியில் கலக்கின்றது.

திருமணிமுத்தாறு:— இந் நதியைச் சேலம் டவுனில் காணலாம். இது சேர்வராயன் மலையில், மஞ்சவாடி கணவாய்க்கு அருகில் தோன்றுகிறது. இந்நதியில் நல்ல ஜலம் கிடையாது. இது காவேரியில் கலக்குமிடத்திற்குச் சற்று மேலே விவசாயத்திற்குப் பயன்படுகிறது.

பாம்பாறு:— இது வட ஆற்காடு ஜில்லாவில் உற்பத்தியாகித் தென் பெண்ணையாற்றில் கலக்கிறது.

வாணியாறு:— இது ஏர்க்காட்டுக் கருகில் உற்பத்தியாகி, ஓமலூர், ஹரூர் தாலூகாக்களின் மூலமாய்ப் பாய்ந்து பெண்ணையாற்றில் கலக்கிறது. இதன் இடக் கரையில் ஹரூர் இருக்கிறது.

கம்பைநல்லூர் நதி:— தர்மபுரித் தாலூகாவில் உற்பத்தியாகி, பெண்ணையாற்றில் கலக்கிறது.

சுவேத நதி:— இது கொல்லிமலையில் உற்பத்தியாகி, ஆத்தூர் தாலூகாவின் வழியாகப் பாய்ந்து, தென் ஆற்காடு ஜில்லாவிற்குச் செல்லுகிறது.

வசிஷ்ட நதி:—இது கல்ராயன் மலையில் உற்பத்தியாகி, ஆத்தூர் மத்தியில் ஓடி, தென் ஆற்காடு ஜில்லாவிற்குச் செல்லுகிறது. இந் நதியால் அநேக நன்செய் நிலங்கள் சாகுபடி ஆகின்றன.

பயிற்சி

1. இந்த ஜில்லாவிலுள்ள முக்கிய நதியின் பெயரென்ன?
2. அந்த நதி எங்கே உற்பத்தியாகின்றது?
3. எந்தெந்தத் தாலூகாக்களுக்கு அருகே பாய்கின்றது?
4. நமது ஜில்லாவின் நதிகளில் எவை அந் நதிக்கு உப நதிகள்?
5. தென் பெண்ணையாறு எந்தெந்தத் தாலூகாக்களில் ஓடுகிறது?
6. அந்நதியின் உப நதிகள் (நமது ஜில்லாவில்) எவை?
7. மேட்டூர் அணையைப்பற்றி 5 வரிகள் எழுது.
8. நமது ஜில்லாவின் மூன்று முக்கிய இயற்கைப் பிரதேசங்கள் எவை?
9. நமது ஜில்லாவில் எது பீடபூமிப் பிரதேசம்?
10. நமது ஜில்லாவில் காடுகள் எங்கு உள்ளன?
11. நமது ஜில்லாவின் படம் வரைந்து, அதில் மலைகளையும், நதிகளையும் குறிப்பிடு.

பதினெட்டாம் பாடம்

ஜில்லாவிலுள்ள விளைபொருள்களும் கைத்தொழில்களும்.

1. விளை பொருள்கள்

நிலத்தின் தன்மைக்குத் தகுந்தபடி விளைபொருள்கள் விளையும். **நன்செய்** எனவும் **புன்செய்** எனவும் நிலங்கள் இருவகைப்படும். நெல், கரும்பு, வாழை, கோதுமை முதலியன நன்செய்ப் பயிர்கள்; சோளம், கேழ்வரகு, துவரை, உளுந்து, எள்ளு, நிலக்கடலை, பருத்தி முதலியன புன்செய்ப் பயிர்கள்.

நமது ஜில்லாவில் சேலம், நாமக்கல், ஆத்தூர் ஆகிய தாலூகாக்



சேலம் ஜில்லா
விளைபொருள்கள்
மைசூர் ராஜ்யம்
வட ஆர்க்காடு ஜில்லா
தென் ஆர்க்காடு ஜில்லா
கோயமுத்தூர் ஜில்லா
திருச்சிராப்பள்ளி ஜில்லா
காவேரி நதி
ஹொசூர்
கிருஷ்ணகிரி
ஹரூர்
தர்மபுரி
சேலம்
ஓமலூர்
ஆத்தூர்
திருச்செங்கோடு
நாமக்கல்
பாக்கு மரம்
பட்டுப்பூச்சி
கம்பு
கிச்சிலி
சோளம்
ராகி
திராக்ஷை
வாழை
எள்
கரும்பு
கொள்ளு
நெல்
காப்பி
ரப்பர்
நிலக்கடலை
புகையிலை
தென்னை
பருத்தி
வெற்றிலை

களில் நெல் விளைவு உண்டு. அநேகமாய் இந்த ஜில்லாவில் விளையும் நெல், அவல் செய்வதற்குத் தான் பயன்படுகிறது.

ஆத்தூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி ஹரூர், திருச்செங்கோடு தாலூகாக்களில் கம்பு விசேஷப் பயிர். கேழ்வரகும் பயிராகின்றது. சேலம், ஆத்தூர், திருச்செங்கோடு ஆகிய இத் தாலூகாக்களில் சோளம் விளைவு ஏராளம். அவ்விடங்களில் சோளத் தட்டை மாடுகளுக்கு முக்கிய உணவாகிறது. தினை, சாமை முதலியன நீர்வளம் இல்லாத மேட்டு நிலங்களில் வேறு பயிர்களைச் சாகுபடி செய்ய முடியாத காலங்களில் பயிர் செய்யப்படுகின்றன.

கிருஷ்ணகிரி தாலூகாவில் துவரை பயிராகிறது. சேர்வராயன் மலையடுத்த இடங்களில் மொச்சையும், ஹரூர், ஓமலூர் தாலூகாக்களில் உளுந்தும், தர்மபுரி தாலூகாவில் எள்ளும் விசேஷமாகப் பயிராகின்றன. கொள்ளு அநேகமாய் ஜில்லா முழுவதிலும் விளைகின்றது.

பருத்தி, திருச்செங்கோடு தாலூகாவிலும், அவுரி, ஆத்தூர் தாலூகாவிலும் விசேஷப் பயிராகச் சாகுபடி செய்யப்படுகின்றன. திருச்செங்கோடு தாலூகாவில் புகையிலையும் பயிராகின்றது. ஆனல், ஆத்தூர் தாலூகாவில் புகையிலை மிகுதியாகப் பயிராகின்றது. அந்தப் புகையிலையால் செய்யப்படும் சுருட்டுகள் பேர் பெற்றவை.

கிருஷ்ணகிரி, ஆத்தூர் தாலூகாக்களின் ஆற்றுப் படுகைகளில் பாக்கும், தென்னையும் விளைகின்றன. ஹொசூர் தாலூகாவில் பாக்கு மரம் விசேஷம்.

நமது ஜில்லாவில் பழங்கள் பயிராகும் தோப்புகள் அநேகம். மாந் தோப்புகள் சேலம் தாலூகா முழுவதிலும், கிச்சிலி (ஆரஞ்சு)த் தோப்புகள் சேர்வராயன் மலைப் பிரதேசத்திலும் ஏராளமாய் உள்ளன.

நமது ஜில்லாவில் சில இடங்களில் இயற்கையான நீர் ஊற்றுகள் உள்ளன. அந்த நீராலும் சில இடங்களில் பயிர்த்தொழில் செய்யப்படுகிறது. அவ்வித ஊற்றுகள் நமது ஜில்லாவில் விசேஷம்.

பயிற்சி

1. நெல் நமது ஜில்லாவில் எங்குப் பயிராகிறது? ஏன்?
2. எள்ளு, நிலக்கடலை, பருத்தி, உளுந்து, திராக்ஷை, புகையிலை முதலியன விசேஷமாய்ப் பயிராகும் தாலூகாக்களைச் சொல்லு.
3. சேர்வராயன் மலையில் பயிராகும் பொருள்களைச் சொல்லு.
4. வெற்றிலை நமது ஜில்லாவில் எங்குப்பயிராகின்றது?
5. வண்டல் மண் நமது ஜில்லாவில் எந்தத் தாலூகாவில் உள்ளது?

---

2. கைத்தொழில்கள்

கைத்தொழில்:—இந்த ஜில்லாவில் நடக்கும் தொழில்களில் முக்கியமானது பயிர்த்தொழிலே. அதையே ஜனங்கள் பெரும்பாலும் செய்து ஜீவிக்கிறார்கள். பயிர்த் தொழிலுக்கு அடுத்துள்ளது நெசவுத் தொழில். இது சேலம், ஓமலூர், இராசிபுரம், திருச்செங்கோடு, தர்மபுரி முதலிய இடங்களில் அதிகம். பட்டுக்கரை வேஷ்டிகள், ஜரிகை அங்கவஸ்திரங்கள், புடவைகள், தலைப்பாகைகள்,


சேலம் ஜில்லா
கைத்தொழில்
மைசூர் ராஜ்யம்
வட ஆர்க்காடு ஜில்லா
தென் ஆர்க்காடு ஜில்லா
கோயமுத்தூர் ஜில்லா
திருச்சிராப்பள்ளி ஜில்லா
காவேரி நதி
ஹொசூர்
கிருஷ்ணகிரி
தர்மபுரி
ஹரூர்
சேலம்
ஓமலூர்
ஆத்தூர்
திருச்செங்கோடு
நாமக்கல்
விவசாயம்
நெசவு
கம்பள நெசவு
எண்ணெய் ஆட்டுதல்
பனை நார்வேலை
பஞ்சாலைகள்
கற்சட்டி செய்தல்
மீன் பிடித்தல்
வெல்லம் செய்தல்
பாத்திரவேலை

பனியன் முதலியன அங்கு உண்டாக்கப்படுகின்றன. கம்பளி நெசவு நாமக்கல் தாலுகாவில் உள்ள சிற்சில இடங்களிலும், சேலம் டவுனிலும் நடைபெறுகிறது. குறும்பர்கள் என்போர் அத்தொழிலில் தேர்ந்தவர்கள். சௌராஷ்டிர ஜாதியாரால் பட்டு நெசவு, ஜரிகை வேலை முதலியன நடைபெறுகின்றன. தேவாங்கர்கள் சாயம் போடும் வேலையிலும், துணி நெய்தலிலும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ராசிபுரத்தில் பித்தளைப் பாத்திரங்கள் செய்யப்படுகின்றன. முன்பு கூறியபடி ஆத்தூர் தாலுகாவிலும் எடப்பாடிக்கு அருகிலும் கற்சட்டிகள் செய்யப்படுகின்றன. சில இடங்களில் பலிஜ நாயுடுகளால் அரக்கு வளையல்கள் செய்தல் உண்டு. கச்சிப்பாளையம் என்ற ஊரில் தோல் பதனிடுதல் நடைபெறுகிறது. திருச்செங்கோட்டில் கதர் துணி நெசவு அதிகமாய் நடைபெறுகிறது; மண்பாண்டம், சிற்ப வேலை, எண்ணெய் ஆட்டுதல் முதலியனவும் நடைபெறுகின்றன. சேலம் டவுனிலும், அங்குள்ள சென்டிரல் ஜெயிலிலும் நல்ல ஜமக்காளங்கள் செய்யப்படுகின்றன.

தென்னையும் பனையும் அதிகமாய்க் காணப்படும் இடங்களில், ஜனங்கள் பனைவெல்லம் முதலியன செய்தும், நாரினால் கயிறு திரித்தும், ஓலைப் பெட்டிகள் செய்தும் ஜீவிக்கின்றனர்.

நமது ஜில்லா, காவேரி யாற்றை ஒட்டி யிருப்பதால் அங்குள்ள செம்படவர்கள் மீன் பிடிப்பதையே முக்கிய தொழிலாகக் கொண்டுள்ளார்கள்.

இன்னும் ஆடு மாடு மேய்த்தல், தச்சுவேலை, கட்டடவேலை, வீடுகளில் வேலை செய்தல், கூலிக்குச் சுமை எடுத்துக்கொண்டு போதல் முதலியன எல்லா இடங்களிலும் உண்டு.

கேள்விகள்

1. நமது ஜில்லாவில் நடக்கும் மூன்று முக்கியத் தொழில்களைச் சொல்லு.
2. பட்டு நெசவு நடக்கும் இடத்தைச் சொல்லு.
3. தர்மபுரியைச் சுற்றியுள்ள இடங்களில் ஜனங்களின் முக்கியத் தொழில் என்னென்ன?

பத்தொன்பதாம் பாடம்

தாலுகாக்களும், முக்கிய ஊர்களும் அங்கு நடைபெறும் தொழில்களும்

(1) சேலம் தாலுகா

சேலம்:—(இதன் ஜனத்தொகை 1,01,628). இது ஒரு பெரிய முனிசிபல் நகரம்; இப்பெயர் கொண்ட ஜில்லாவுக்கும், தாலுகாவிற்கும் தலைநகர். திருமணி முத்தாறு இந்நகரை இரு பாகங்களாகப் பிரிக்கின்றது. ஆற்றின் மேற்குப் பக்கம் இருக்கும் பாகத்திற்குச் செவ்வாய்ப் பேட்டை என்பதும், கிழக்குப் பக்கம் இருக்கும் பாகத்திற்குச் சேலம் என்பதும் பெயர். செவ்வாய்ப் பேட்டையில் விசேஷமான வியாபாரம் நடக்கின்றது.

இந் நகரில் ஒரு காலேஜும், நான்கு ஹைஸ்கூல்களும் இருக்கின்

றன. அவற்றுள் ஒன்று பெண் பாடசாலே. கோட்டை என்னுமிடத்தில் மகம்மதியர் பள்ளி வாசலும், சௌந்தர ராஜப் பெருமாள் கோவிலும், விசேஷமானவை. மேட்டுத் தெருவில் உள்ள சுகவனேஸ்வரர் கோயிலும் பிரசித்தமானது.



சுகவனேஸ்வரர் கோயில்

இப் பட்டணத்தில் பட்டுக்கரை வேஷ்டிகள் ஏராளமாய் நெய்யப்படுகின்றன. அவைகளை நெய்யும் சௌராஷ்டிரர்களும் இங்கு அதிகம். மணிலாக் கொட்டையும், மாம்பழங்களும் இந்நகரிலிருந்து அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்நகரில் தற்காலம் போதிய ஜல வசதி இல்லை. மேட்டூர் அணையிலிருந்து குடி தண்ணீர், குழாய்கள் மூலம் கொண்டுவர ஏற்பாடாகி வருகின்றது.

இந் நகரைச் சுற்றி நான்கு பக்கங்களில் மலைகளும், குன்றுகளும் உள்ளன. இவ்வூரைச் சேர்ந்து நான்கு ரயில்வே ஸ்டேஷன்கள் உள்ளன.

ஏர்க்காடு:—(2,395) இது சேலத்திற்கு வடக்கில் சேர்வராயன் மலை மீதுள்ள ஓர் அழகிய ஊர். இவ்வூருக்கருகில் ஓர் ஏரியும், புல் காடும் உண்டு. இவ்வூர், கோடைக் கால வாசஸ்தலம். காப்பி இவ்விடத்தில் விசேஷமாய்ப் பயிராகின்றது.



சேர்வராயன் மலை

அயோத்தியா பட்டணம்:—(2,325) இவ்வூர் சேலம் நகருக்கு 5 மைல் கிழக்கில் உள்ளது. ஸ்ரீராமர் இவ்வூர் வழியாகச் சென்ருர் என இந்துக்கள் கூறுகின்ருர்கள். இங்குள்ள ஸ்ரீராமர் கோயில் விசேஷமானது. இவ்வூரைச் சுற்றித் தென்னை நன்கு பயிராகின்றது.

மல்லூர்:—(2,447) சேலத்திலிருந்து நாமக்கல் செல்லும் பாதையில் இவ்வூர் இருக்கின்றது. பொய்மான் கரடு என்று ஒரு பாறை இவ்வூருக்கு அருகில் இருக்கிறது. மாரீசன் மான் உருவம் எடுத்தது இங்குதான் என்று சொல்லுகின்ருர்கள். இங்கிருந்து பொரி ஏற்றுமதியாகிறது.

சூரமங்கலம்:—இது சேலம் ஜங்ஷன் என்றும் சொல்லப்படும். இவ்வூரில் பஞ்சாயத்துப் போர்டு ஆபீஸும் இருக்கிறது. இவ்வூரிலிருந்து ஏர்க்காட்டிற்கு நல்ல பாதை போடப்பட்டுள்ளது. இந்த ஊருக்கு அருகில் வடக்காக உள்ள குன்றுகளில் மாக்னிஸைட் என்ற ஒரு விதச் சுண்ணும்புக்


சேலம் ஜில்லா
ஸ்கேல்
1 அங்குலம் = 15 மைல்
தாலூகாக்கள்,
முக்கிய ஊர்கள்
பாகலூர்
பேரிகை
ஹொசூர்
அங்குசகிரி
மத்தகிரி
சூல்கிரி
தளி
கெல்மங்கலம்
டெங்கனிக் கோட்டை
அஞ்செட்டிதுர்க்கம்
ஹொசூர்
தாலூகா
ராயகோட்டை
மகாராஜ கடை
கிருஷ்ணகிரி
கிருஷ்ணகிரி
தாலூகா
காவேரிப் பட்டணம்
மாத்தூர்
மைசூர் ராஜ்யம்
வட ஆர்க்காடு ஜில்லா
சிங்காரப் பேட்டை
பாலக்கோடு
காரிமங்கலம்
சாமல்பட்டி
ஊத்தங்கரை
தீர்த்தமலை
பென்னாகரம்
தர்மபுரி
கம்பைநல்லூர்
மொரப்பூர்
ஹரூர்
காவேரி நதி
தர்மபுரி
தாலூகா
தென்கரைக்கோட்டை
ஹொகேனகல்
பொம்மிடி
ஹரூர்
தாலூகா
பெரும்பாலை
தொப்பூர்
தென் ஆர்க்காடு ஜில்லா
காவேரி நதி
ஏர்க்காடு
அயோத்யாபட்டணம்
ஓமலூர் தாலூகா
மேட்டூர் அணை
மேச்சேரி
ஓமலூர்
சேலம்
ஆத்தூர்
கோயம்புத்தூர் ஜில்லா
தாரமங்கலம்
சூரமங்கலம்
ஜலகண்டபுரம்
சேலம்
தாலூகா
ஏத்தாப்பூர்
பெ. நா. பாளையம்
ஆத்தூர்
தம்மம்பட்டி
தலைவாசல்
செந்தாரப்பட்டி
எடப்பாடி
மல்லூர்
திருச்செங்கோடு
ஆத்தூர் தாலூகா
கொமாரபாளையம்
மகுடஞ்சாவடி
இராசிபுரம்
கங்கவல்லி
சங்ககிரி துர்க்கம்
திருச்செங்கோடு
நாமகிரிப் பேட்டை
பள்ளிப்பாளையம்
சேந்தமங்கலம்
காவேரி நதி
நாயனூர்மலை
நாமக்கல்
பரமத்தி
நாமக்கல் தாலூகா
மோகனூர்
திருச்சிராப்பள்ளி
ஜில்லா

கல் அகப்படுகிறது. அங்குள்ள ஒரு கம்பெனியார் பலவிதமான பீங்கான் பாத்திரங்களைச் செய்கிறார்கள். ஏர்க்காட்டில் விளையும் பொருள்கள் இங்கு ஏற்றுமதியாகின்றன.

(2) ஓமலூர் தாலூகா

ஓமலூர்:—(2,494) இவ்வூர் இத் தாலூகாவின் முக்கிய பட்டணம். இங்கு ஒரு ரயில்வே ஸ்டேஷனும், ஒரு மிடில் ஸ்கூலும், லோகல் பண்டு வைத்தியசாலையும், தாலூகா ஆபீஸ், சப் ரிஜிஸ்தரார் ஆபீஸும் இருக்கின்றன. இது சேலத்திலிருந்து 10 மைல் தூரத்திலிருக்கிறது; தொப்பூர்க் கணவாய் முகப்பில் உள்ளது. இங்குத் தானிய வியாபாரமும், துணி நெய்தலும் நடைபெறுகின்றன.

மேட்டூர் அணை :— சேலத்திலிருந்து இவ்வூர் 26 மைல் மேற்கில் உள்ளது. சமீப காலத்தில் போடப்பட்டுள்ள சேலம்—மேட்டூர் அணை



மேட்டூர் அணை

இருப்புப் பாதை இங்கே முடிகிறது. இவ்வணையைப்பற்றி நாம் முன்பே கூறியிருக்கிறோமல்லவா? இந்தியாவின் பல பாகங்களிலிருந்து மேட்டூர் அணையின் காட்சியைக் காண ஜனங்கள் வருகிறார்கள்.

மேச்சேரி :—இது ஓமலூருக்கு வடமேற்கில் 16 மைல் தூரத்தில் உள்ள ஒரு வியாபாரஸ்தலம். மேச்சேரி ரோட் என்ற ரயில்வே ஸ்டேஷன் இவ்வூருக்கு அருகில் இருக்கிறது. இங்கு வாரத்துக்கு ஒரு முறை பெரிய சந்தை கூடுகிறது. இவ்வூரில் உள்ள பத்திரகாளியம்மன் கோயில் பிரசித்திபெற்றது. திருவிழாக் காலத்தில் மாட்டுச் சந்தை கூடுகிறது. இவ்வூரில் நல்ல கற்சட்டிகள் செய்யப்படுகின்றன.

தாரமங்கலம் :— (7,104) இவ்வூர் ஓமலூரிலிருந்து 5 மைல் தூரத்திலுள்ளது. இங்கேயுள்ள சிவன் கோவில் பிரசித்தமானது; ஆயிரக்கால் மண்டபமும், தெப்பக்குளமும் அழகானவை. இவ்விடத்தில் நெசவுத் தொழில் செய்பவர்கள் அதிகம்.

ஜலகண்டபுரம் :-இங்குத் தேவாங்க ஜாதியார்கள் ஏராளம். அவர்களது தொழில், நெசவுத் தொழிலும் சாயமேற்றுதலுமாம், இவ்வூரில் பனை வெல்லம் செய்தலும் அதிகம். இவ்வூரைச் சுற்றிப் புகையிலை விளைவு மிகுதி. இங்குப் போர்டு உயர்தர ஆரம்பப் பாடசாலை ஒன்று உண்டு.

நங்கவல்லி :—இது ஓமலூருக்குத் தென் மேற்கிலுள்ளது. இங்குள்ள நரசிம்ம சுவாமி கோயில் பிரசித்தமானது.

அமரகுந்தி:—(2,225) இவ்வூர் முன் காலத்தில் சிறந்த நகரமாய் இருந்தது. இங்குப் பல சிறு கோயில்கள் உள்ளன.

(3) தர்மபுரி தாலூகா

தர்மபுரி:—(14,815) இது இத்தாலூகாவின் தலை நகரம். மொரப்பூர் ஜங்ஷனி லிருந்து ஹொசூர் செல்லும் இருப்புப் பாதையில் இது ஓர் ஸ்டேஷன். நெசவுத் தொழிலும், எண்ணெய் ஆட்டுதலும் இங்கு விசேஷம். இது சிறந்த வியாபார ஸ்தலம்.

முன் காலத்தில் இதற்குத் தகடூர் எனப் பெயர் வழங்கி வந்ததாம். தாலூகாவிற்கு வேண்டிய ஆபீஸுகளும், போர்டு ஹைஸ்கூலும் இங்கு இருக்கின்றன. இங்குள்ள குளம் மன்ரோ துரை காலத்தில் வெட்டப்பட்டது. அதன் அருகில் உள்ள பீடமும், தூணும் அவர் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட் டிருக்கின்றன.

தொப்பூர்:—இவ்வூருக்கு அருகில் தொப்பூர் ஆறு பாய்கிறது. இது சரித்திரத்தில் பெயர்பெற்ற ஊர். இங்கே பிரயாணிகள் தங்க மைசூர் அரசரால் கட்டப்பட்ட ஒரு பெரிய சத்திரம் இருக்கிறது

பென்னுகரம்:—(4,008) இவ்வூர் தர்மபுரிக்கு மேற்கில் 18 மைலில் உள்ளது. ஊரைச் சுற்றிலும் காடுகள் அதிகம். இங்கு டெபுடி தாசில்தார் ஆபீஸு இருக்கிறது. கடுக்காய், ஆவாரப்பட்டை, மூங்கில் வியாபாரம் நடைபெறுகிறது. இங்குள்ளவர்கள் மூங்கிற் பாய்கள் பின்னுகிறார்கள்.

பாலக்கோடு:—இங்கொரு வாரச் சந்தை உண்டு. தர்மபுரியிலிருந்து இவ்வூர் வழியாக மைசூருக்கு ரஸ்தா செல்லுகிறது. இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இங்கே தேங்காய் நார், பனை நார் ஆகிய இவற்றால் கயிறு திரிக்கப்படுகிறது.

பெரும்பாலை:—(2,632) இவ்வூருக்கு அருகில் பாலாறு பாய்கிறது. கவரை நாயுடுமார்கள் இங்கு விசேஷம். இரும்புக் கரண்டிகளும், கத்திகளும், பலவிதச் சாமான்களும் இங்குச் செய்யப்படுகின்றன.

ஹொகனக்கல்:— இது சனத்குமார நதி காவிரியில் விழும் இடத்தி லிருக்கிறது. இவ்வூருக்கு அருகில் அந்நதி அதிக உயரத்தி லிருந்து விழுவதால் தண்ணீர்த் துளிகள் மேகம்போற் காணப்படும்.



ஹொகனக்கல் நீர் வீழ்ச்சி.

பல இடங்களிலிருந்தும் ஏராளமான ஜனங்கள் வந்து நீராட்டிச் செல்லுகிறார்கள்.

அதமன் கோட்டை :— (3,097) இங்குப் பழமையான கோட்டை இருக்கிறது. இவ்வூரில் வாரச் சந்தை கூடுகிறது.

பாப்பாரப்பட்டி:—இங்கு நெசவுத் தொழிலும், வாரச் சந்தையும் நடைபெறுகின்றன.

(4) ஹொசூர் தாலூகா

ஹொசூர் :— (6,071) இது இத் தாலூகாவின் முக்கிய பட்டணம்; நமது ஜில்லாவின் வட கோடியில் இருக்கிறது. பெங்களூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி ஆகிய இடங்களிலிருந்து வரும் பாதைகள் இங்குச் சந்திக்கின்றன. இவ்வூரி லிருந்து பெங்களூர் 25 மைல்தான். இவ்வூரில் ஜனத் தொகை வரவரக் குறைந்துகொண்டே போகிறது. இவ்வூரின் ஒரு பாகமாகிய புதிய பேட்டையில் சர்க்கார் ஆபீஸுகள் உள்ளன. இங்குப் போர்டு ஹைஸ்கூலும், சர்க்கார் வைத்திய சாலையும் இருக்கின்றன. இங்குள்ள குன்றின் மீது கோட்டையும், கோயிலும் உள்ளன. அங்கே ரதோற்சவம் நடைபெறும். இங்குள்ள தேர் மிகவும் பெரியது.

டேங்கணிக்கோட்டை:— (5,807) இவ்வூர் ஹொசூருக்குத் தெற்கில் 16 மைலில் உள்ளது. சரித்திரப் பிரசித்திபெற்ற ஒரு கோட்டை இருந்தது. இங்குள்ள பெத்தராய சுவாமி கோயில் விசேஷமானது. இதில் வருடந்தோறும் தேர்த் திருவிழா நடைபெறும். இவ்வூரில் இரும்பு நாற்காலி, கட்டில், பெஞ்சு முதலியன செய்து இதர இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

மத்தகிரி :— (3,568) இங்கு வாரந்தோறும் ஒரு சந்தை கூடுகிறது. இவ்வூரில் தானியம், தோல் வியாபாரம் உண்டு. இங்கிருந்து குதிரைகள் ராணுவத்திற்கு அனுப்பப்படுகின்றன.

பாகலூர்:—இது ஹொசூரிலிருந்து 7 மைல் தூரத்தில் இருக்கிறது. கோட்டை ஒன்று இங்கே உள்ளது. தென்னை விவசாயம் மிகுதி.

அங்குசகிரி:—இது இத் தாலூகாவின் வடகிழக்கில் உள்ள ஊர். இங்குள்ள மலை அங்குசத்தைப்போல் இருப்பதால் இவ்வூருக்கு அப்பெயர் ஏற்பட்டது. இங்குள்ள மஹாநவமி வயல் என்ற அரண்மனை இப்போது பாழடைந்த நிலைமையி லிருக்கிறது.

சூலகிரி:— இவ்வூரைச் சேர்ந்த குன்றுகள் சூலாயுதம் போல் இருக்கின்றன. மலையின் மீது இவ்வூர் இருக்கிறது. அரைக் கச்சைகள் இங்கே நெய்யப்படுகின்றன.

கேலமங்கலம்:-இது ஒரு ரெயில்வே ஸ்டேஷன். இங்கிருந்து ஹொசூர், ராயக்கோட்டை, டெங்கணிக்கோட்டை முதலிய இடங்களுக்குப் பாதைகள் செல்லுகின்றன. இங்கு வாரச் சந்தை கூடும். அதில் கால்நடை வியாபாரமும், அரிசி, பாக்கு, கேழ்வரகு வியாபாரமும் மிகுதியாய் நடைபெறுகின்றன. இது திப்புசுல்தான் காலத்தில் ராணுவம் தங்கும் இடமாக இருந்தது.

ராயகோட்டை :— (2,124) இவ்வூருக்கு அருகில் உள்ள பெரிய குன்றின்மீது பாழடைந்த கோட்டையும், தூர்வாச முனிவர் கோயிலும்,

பல வகையான ஊற்றுகளும் உள்ளன. ஊரைச் சுற்றிலும் அடர்ந்த காடுகளும், பள்ளத்தாக்கில் ஒரு நீர் அருவியும் இருக்கின்றன. அதில் அநேகர் வந்து நீராடிச் செல்லுகிறார்கள்.

பேரிகை:—இது ஒரு ஜமீன் ஊர். இங்கு பட்டுப்பூச்சிகளிலிருந்து பட்டு எடுக்கப்படுகிறது. காடுகளில் தேன், ஆவாரம்பட்டை, எட்டிக்கொட்டை ஏராளமாய்க் கிடைக்கின்றன.

தளி:—இங்குள்ள வரி மிகவும் பெரியது. இங்கே கூடும் வாரச் சந்தையில் வாழைப்பழ வியாபாரம் மிகுதி. இங்குள்ள காடுகளில் சந்தனக் கட்டைகள் கிடைக்கின்றன.

அஞ்செட்டி துர்க்கம்:—ஹைதரும் திப்புவும் ஆண்ட காலத்தில் இங்குள்ள கோட்டையைக் கட்டியிருக்கிறார்கள்.

(5) கிருஷ்ணகிரி தாலூகா

கிருஷ்ணகிரி:—(12,766) இது இத்தாலூகாவின் முக்கிய பட்டணம்; திப்பு சுல்தான் ஆண்ட காலத்தில் பிரசித்தி பெற்றது. சென்னையிலிருந்து இவ்வூர் வழியாகப் பெரிய சாலை செல்லுகிறது. திருப்பத்தூரிலிருந்து இவ்வூர்வரை இருப்புப் பாதை உள்ளது. இப் பட்டணத்திற்கு அருகில் உள்ள குன்றின்மீது கோட்டை ஒன்று உண்டு. இந்நகர் இரு பிரிவுகளாக இருக்கிறது. வட பாகத்திற்குக் கிருஷ்ணகிரி என்றும், தென் பாகத்திற்குத் தௌலதாபாத் என்றும் பெயர். இவ்வூர் சரித்திரப் பிரசித்தி பெற்றது. வாரந்தோறும் சந்தை நடைபெறுகிறது. திராக்ஷை இவ்வூரைச் சுற்றி விசேஷம். அது இராஜதானியில் பல பாகங்களுக்கும் ஏற்றுமதியாகிறது. இங்கே ஒரு போர்டு ஹைஸ்கூலும், சர்க்கார் வைத்திய சாலையும், தாலூகா ஆபீசும் இருக்கின்றன.

யாத்தூர்:—இங்கு நான்கு முக்கிய சாலைகள் ஒன்று கூடுகின்றன; வாரச் சந்தை நடைபெறுகிறது.

மகாராஜ கடை:—கிருஷ்ணகிரியிலிருந்து வடக்கில் இவ்வூர் மலையடிவாரத்தில் உள்ளது. அம்மலைமீது இடிந்த கோட்டை ஒன்றிருக்கிறது. ஊரைச் சுற்றிலும் காடுகள் அதிகம்.

காவேரிப் பட்டணம்:—(6,962). இவ்வூருக்கு அருகில் தென் பெண்ணையாறு பாய்கிறது. இங்கே வெற்றிலைத் தோட்டங்களும், மாந்தோப்புகளும் விசேஷம். நல்லெண்ணெய் இங்கிருந்து ஏற்றுமதியாகிறது. போர்டு நடுத்தரப் பாடசாலை உண்டு. இது வியாபாரஸ்தலம். ஆற்றோரங்களில் மா, பலா, வெற்றிலைத் தோட்டங்கள் மிகுதி.

இதர முக்கிய ஊர்கள்:—போச்சம்பள்ளி, பர்கூர், ஜெகதேவி பாளையம் முதலியன.

(6) ஹநூர் தாலூகா

ஹநூர்:—(4,259) இது இத்தாலூகாவின் தலைநகர்; வாணி ஆற்றின் கரையிலிருக்கிறது. சேலத்திலிருந்து இது சுமார் 40 மைலில் உள்ளது. மொரப்பூர் ஜங்ஷனிலிருந்து இவ்வூருக்குச் செல்லலாம். தாலூகாவுக்கு வேண்டிய ஆபீஸுகள், உயர்தர ஆரம்பப் பாடசாலை இங்கு உள்ளன. வாரச் சந்தை

கூடும். ஊருக்குத் தெற்கே பெரிய ஏரியும், வடக்கே வருண குளமும், சிவன் கோயிலும் இருக்கின்றன.

ஊத்தங்கரை:- இவ்வூர் ஹரூருக்கு வடக்கில் 8 மைல் தூரத்தில் இருக்கிறது. சாமல்பட்டி ஸ்டேஷனில் இறங்கி இவ்வூருக்குப் போகலாம். நெசவுத் தொழில், புகையிலை, உளுந்து வியாபாரம் இங்கு நடைபெறுகின்றன. இவ்வூரில் டெபுடி தாசில்தார் ஆபீசும், போலீஸ் ஸ்டேஷனும் இருக்கின்றன.

சிங்காரப் பேட்டை:— இவ்வூர் செங்கம் கணவாயில் உள்ளது. ஊத்தங்கரையி லிருந்து திருவண்ணாமலைக்கு இதன் மூலமாய் ரஸ்தா செல்லுகிறது. இவ்வூரில் சமீப காலத்தில் கட்டப்பட்டுள்ள பைகாரா மின்சார நிலயத்திலிருந்து பல இடங்களுக்கு மின்சாரம் சப்ளை செய்யப்படுகின்றது. இங்கு மகம்மதியர்கள் அதிகம். இவ்வூரைச் சுற்றியுள்ள காடுகளிலிருந்து தேன், மெழுகு, மூங்கில் முதலியன வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

மோரப்பூர்:—இது ஓர் இருப்புப் பாதை ஜங்ஷன். இங்கு வாரச் சந்தை கூடுகிறது. உளுந்து கொள்ளு, முத்துச்சோளம் முதலியன இங்கிருந்து வெளி யிடங்களுக்கு ஏற்றுமதியாகின்றன.

பொம்மிடி:—இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். சேர்வராயன் மலையில் விளையும் பொருள்க ளெல்லாம் இங்குக் கொண்டுவரப்பட்டு ஏற்றுமதியாகின்றன. இவ்வூரில் வாரந் தோறும் பெரிய சந்தை கூடுகிறது.

தீர்த்தமலை:— ஹரூருக்கு வட கிழக்கில் உள்ள ஓர் புண்ணிய ஸ்தலம். இது மலைமேல் உள்ள ஊர். இங்குள்ள கோயிலும், தீர்த்தமும் பிரசித்தமானவை.

தென்கரைக் கோட்டை:—(1,165) இங்குள்ள திரௌபதி யம்மன்கோயில் பிரசித்தி பெற்றது. தேங்காய் நார் உரித்தல் இங்கு விசேஷமாக நடைபெறுகிறது. இவ்வூரில், அழகிய கோட்டையும், ஊரைச் சுற்றித் தென்னை மரங்களும் உள்ளன.

கம்பை நல்லூர்:—இதன் சமீபத்தில் கம்பை நல்லூர் ஆறு பாய்கிறது. இவ்வூர் மிட்டா; அதாவது சிறிய ஜமீன். இங்கே நெசவுத் தொழில் நடைபெறுகிறது. தானிய வியாபாரம் மிகுதி.

இதர முக்கிய ஊர்கள்:— பாபிரெட்டிபட்டி, தொட்டம்பட்டி, கல்லாவி, அனும தீர்த்தம் முதலியன.

(7) ஆத்தூர் தாலூகா

ஆத்தூர்:—(11,676) இது தாலூகாவின் தலைநகர். வசிஷ்டநதி இவ்வூரின் மத்தியில் பாய்கிறது. மேற்குப் பிரிவுக்கு ஆத்தூர் எனவும், கிழக்குப் பிரிவுக்குப் புதுப் பேட்டை எனவும் பெயர். நதிக்கு வடபுறத்தில் உள்ள ஒரு சதுரமான கோட்டையில் விஷ்ணு ஆலயம் ஒன்று உள்ளது. சேலத்திலிருந்து ஆத்தூர் 32 மைல் தூரத்திலிருக்கிறது. இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். மிஷன் உயர்தர ஆரம்பப் பாடசாலையும், தாலூகாவுக்கு வேண்டிய ஆபீஸுகளும் இங்கு உள்ளன.

தம்பம்பட்டி:—இது பச்சைமலைக்கும் கொல்லிமலைக்கும் இடையே

யுள்ள கணவாய்க்கு வடக்கில் சுவேத நதிக்கரையில் உள்ளது. கொல்லி மலை, பச்சைமலைகளில் உண்டாகும் புளி, பருப்பு, பலா, புகையிலை, கடுகு, ஆமணக்கு இங்கு வியாபாரமாகிறது. இவ்வூர்ப் புகையிலை விசேஷமானது. இங்கு வாரச் சந்தை கூடுகிறது.

எத்தாப்பூர்:—(3,686) வசிஷ்டநதியின் வடக்குக் கரையில் இருக்கிறது. புகையிலை, வெல்லம், தேங்காய், விறகு முதலானவை இங்குவியாபாரம் நடைபெறுகின்றன. இது தேகசௌக்கியத்திற்கு ஏற்ற ஊர்.

தலைவாசல்:— இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். ஆத்தூரிலிருந்து 12 மைல். சேலத்திலிருந்து கூடலூருக்கு இவ்வூர் வழியாகச் சிறந்த ரஸ்தா போகிறது. முன் காலத்தில் ஆண்ட சேர, சோழ, பாண்டியர் நாடுகளுக்கு எல்லையாக இருந்ததால் இதற்கு இப்பெயர் ஏற்பட்டது.

கெங்கவல்லி:—(3,624) இவ்வூர் சுவேத நதிக்கரையில் இருப்பதால் செழிப்பாயுள்ளது. ஆத்தூரிலிருந்து தெற்கில் 8 மைல் தூரத்திலிருக்கிறது. இங்கு நெல், புகையிலை விளைவு அதிகம்.

செந்தாரப்பட்டி :— ஆத்தூரிலிருந்து திருச்சிக்கு இவ்வூர் வழியாகச் சாலைசெல்லுகிறது. புகையிலை, மிளகாய் முதலியன இங்கு நன்கு பயிராகின்றன.

மேலூர்:— இவ்வூருக்கு அருகில் விசித்திரமான வெள்ளைப் பாறைகள் உள்ளன. இது கெங்கவல்லிக்குத் தெற்கில் இருக்கிறது.

பெத்தநாய்க்கம் பாளையம் :—ஆத்தூரிலிருந்து மேற்கில் 5 மைல் தூரத்திலிருக்கிறது. இதைச் சுற்றி நல்ல செழிப்பான நிலங்கள் உள்ளன.

(8) நாமக்கல் தாலூகா

நாமக்கல் :—(19,306) இது தாலூகாவின் தலைநகர். இவ்வூர், பேட்டை, கோட்டை என இரு பிரிவுகளாக உள்ளன. கோட்டையின் உயரம் 200 அடி; சுற்றளவு $\frac{1}{2}$ மைல். பேட்டையில் உள்ள விஷ்ணு ஆலயம் பிரசித்தமானது. தாலூகா ஆபீஸ், முன்சீப் கோர்ட்டு, போர்டு ஹைஸ்கூல் முதலியன இங்குள்ளன. சேலத்திலிருந்து திருச்சிக்குச் செல்லும் ரஸ்தாவில் 30 மைல் தூரத்தில் இருக்கிறது. இவ்வூரின் கீழ்ப்புறமுள்ள அரங்கநாதர் கோயிலும், மேல்புறமுள்ள நரசிங்கப் பெருமாள் கோயிலும் பல்லவ அரசர்களால் கட்டப்பட்டவை. இங்குப் பட்டு வஸ்திரங்கள் நெசவு அதிகம்

இராசிபுரம்:இது சேலத்திலிருந்து நாமக்கல் செல்லும் பாதையில் 16 மைல் தூரத்தில் உள்ளது. போர்டு ஹைஸ்கூல் ஒன்று உண்டு. இவ்வூர் வெல்லமும் அரிசியும் விசேஷமானவை. இங்குத் தானிய வியாபாரமும், நெசவுத் தொழிலும் நடைபெறுகின்றன.

மோகனூர் :— இது காவேரியின் கரையில் உள்ள ஊர். பஞ்சாயத்துப் போர்டு ஆபீஸ் இருக்கிறது. இது ஒரு சிவ ஸ்தலம். இவ்வூரைச் சுற்றி வாழை செழித்துப் பயிராகிறது.

பரமத்தி:—இதுவும் ஒரு சிவ ஸ்தலம். பட்டு அங்கவஸ்திரங்கள் இங்கு

நெய்யப்படுகின்றன. இவ்வூர் நாமக்கல்லி லிருந்து 12 மைல் தூரத்தி லிருக்கிறது.

சேந்தமங்கலம்:—(11,252) நாமக்கல்லுக்கும் இதற்கும் 7 மைல். இங்கிருந்து பித்தளைப் பாத்திரங்கள், பட்டு வஸ்திரங்கள், அரக்கு வளையல்கள் வெளியூர்களுகு அனுப்பப்படுகின்றன.

நாமகிரிப் பேட்டை:—இராசி புரத்தி லிருந்து 6 மைல் கிழக்கில் உள்ள செழிப்பான ஊர். இங்கு இரும்பு அகப்படுகிறது. என்றாலும், தொழில் நடத்த நிலக்கரி அகப்படுவதில்லை. இவ்வூரைச்சுற்றி நன்செய் விவசாயம் நன்கு நடை பெறுகிறது.

நாயனர் மலை:—நாமக்கல்லி லிருந்து இவ்வூர் 10 மைலில் இருக்கிறது. குன்றின் மீதுள்ள விஷ்ணு கோயில் பிரசித்தி பெற்றது. நைனா மலை என்றும் இதைச் சொல்லுவார்கள். இங்குப் புதன், வியாழன் ஆகிய இரண்டு நாட்களிலும் சந்தை கூடுகிறது.

(9) திருச்செங்கோடு தாலூகா

திருச்செங்கோடு:—(12,301) இது இந்தத் தாலூகாவின் முக்கிய நகர்; சங்ககிரி ரயில்வே ஸ்டேஷனி லிருந்து தெற்கில் 5 மைல் தூரத்தில் உள்ளது. தாலூகாவுக்கு வேண்டிய ஆபீஸுகளும், போர்டு ஹைஸ்கூலும் உள்ளன. இவ்வூருக்குத் தெற்கில் உள்ள குன்றுக்கு நாககிரி என்று பெயர். அம்மலையின் பேரில் உள்ள அர்த்த நாரீஸ்வரர், ஆதிகேசவப் பெருமாள், செங்கோட்டு வேலவர் கோயில்கள் பிரசித்தமா



திருச்செங்கோடு மலை.

னவை. அங்குப் பல கல் வெட்டுச் சாஸனங்களைக் காணலாம். மலையில் பிள்ளையார் கோயில் பக்கத்தில் மலடிக்கல் என்ற சிகரம் உண்டு. நெசவுத் தொழில் அதிகமாக இவ்வூரில் நடைபெறுகிறது.

வைகாசிமாதம் நடைபெறும் திருவிழாச் சமயத்தில் ஏராளமான ஜனங்கள் வருவார்கள். இங்குக் குருந்தக்கல் வெட்டுத் தொழிலும், ராவுத்தொழிலும் நடைபெறுகின்றன. பருத்தி, வேர்க்கடலை, நெல் அரைக்கும் இயந்திரசாலைகள் இருக்கின்றன. ஊரின் மத்தியில் பெரிய சிவாலயம் இருக்கிறது. அதில் தைப்பூசத் தன்று திருவிழா நடைபெறுகிறது.

சங்ககிரி துர்க்கம்:—(2,826) இது ஒரு ரயில்வே ஸ்டேஷன்; சேலத்திலிருந்து கோயமுத்தூருக்குச் செல்லும் சாலையில் 23 மைல் தூரத்தில் உள்ளது. சங்குபோல ஒரு மலை இங்கு இருக்கிறது. அதனாலேயே இவ்வூருக்கு இப்பெயர் ஏற்பட்டது. இது ஆரோக்கியமான ஸ்தலம். மலையின்மேல் நீர் ஊற்றுக்கள் உள்ளன. இவ்வூரில் டெபுடி கலெக்டர் ஆபீஸும், முன்சீப் கோர்ட்டும்

இருக்கின்றன. மலையின்மேல் உள்ள பல கோட்டைகள் ஹைதர், திப்பு வால் கட்டப்பட்டவை.

எடப்பாடி:—சரபங்கநதி இதற்கு அருகில் பாய்கிறது. விளக்கெண்ணெய் எடுத்தல், பித்தளைப் பாத்திரம் செய்தல், வெடியுப்புக் காய்ச்சுதல் முதலிய வேலைகள் நடைபெறுகின்றன. இங்குப் புகையிலை வியாபாரம் நடைபெறுகிறது.

மகுடஞ் சாவடி :—இங்கு மக்டாலைல்ட் என்ற ஆங்கிலேயரால் கட்டப்பெற்ற ஒரு பெரிய சத்திரம் இருக்கிறது. இது ஒரு ரயில்வே ஸ்டேஷன்.

கோமார பாளையம் :— (6,181) காவேரி நதியின் கிழக்குக் கரையில் உள்ள ஊர். பஞ்சாயத்து போர்டு ஆபீஸூம், ஆரம்பப் பாடசாலையும் உள்ளன. சென்னையிலிருந்து கள்ளிக்கோட்டைக்குச் செல்லும் ரஸ்தா, இவ்வூர் வழியாகப் போவதால் இங்கு காவேரிக்கு ஒரு பாலம் கட்டியிருக்கிறார்கள். இங்குள்ள காவேரியில் நீராட, ஆடி மாதத்திலும், ஐப்பசி மாதத்திலும் ஏராளமான ஜனங்கள் வருவார்கள். இவ்வூருக்கு எதிர்க்கரையில் கோயமுத்தூர் ஜில்லாவைச் சேர்ந்த பவானி இருக்கிறது.

இதர முக்கிய ஊர்கள்:— காளிப்பட்டி, சித்தூர், பள்ளிப்பாளையம் முதலியன.

இருபதாம் பாடம்

போக்கு வரவு சாதனங்கள்

வியாபாரச் சரக்குகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுபோவதற்கும், ஜனங்கள் இடம் விட்டு இடம் வேலை நிமித்தம் செல்லுவதற்கும், போக்கு வரவுச் சாதனங்கள் அவசிய மல்லவா? இவ்வித சாதனங்களை நான்கு விதங்களாய்ப் பிரிக்கலாம்.

அவை (1) கடல் மார்க்கம், (2) கால்வாய் மார்க்கம், (3) ரஸ்தா மார்க்கம், (4) இருப்புப்பாதை மார்க்கம் என்பன.

தற்காலத்தில் ஆகாய மார்க்கமும் ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் ஆகாய விமானங்கள் அதிக தூரத்திலுள்ள சிற்சில நகரங்களுக்குத் தான் செல்லுகின்றன.

நமது ஜில்லாவுக்குக் கடற்கரை இல்லை யென்று முன்பே கூறியிருக்கிறோமல்லவா ? ஆதலால் கடலின் மூலம் போக்குரவு இல்லை; பெரிய கால்வாய்களும் இல்லை. ஆனால், காவேரியாற்றங் கரையின் ஊர்களிலுள்ள ஜனங்கள் அக்கரைக்குச் செல்லும் போது பாலமில்லாத இடத்தில் ஓடங்களில் ஏறி ஆற்றைக் கடப்பது உண்டு.

ரஸ்தாக்கள்:—நமது ஜில்லாவில் பெரிய ரஸ்தாக்களும், கிளை ரஸ்தாக்களும் அநேகம் உள்ளன. பெரிய ரஸ்தாக்களின் நீளம் சுமார் 2000 மைல். எல்லா ரஸ்தாக்களும் அநேகமாய்க் கணவாய் வழியாகவே செல்லுகின்றன.

1 சேலம் நகர்

நமது சேலம் ஜில்லாவுக்கு முக்கிய பட்டணம் சேலம் டவுன் அல்லது சேலம் நகர் ஆகும். இது ஜில்லாவின் நடுப்பாகத்தில் இருக்கிறது. ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும் சாலைகள் மூலமாகவும் ரயில் மார்க்கமாகவும் வந்து சேரப் பல வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன.

இந் நகரைச் சேர்ந்து நான்கு ரயில்வே ஸ்டேஷன்கள் உள்ளன. அவை:—சேலம் ஜங்ஷன், சேலம் மார்க்கெட், சேலம் டவுன், கிழக்குச் சேலம் என்பனவாம்.

சேலம் டவுன் ஸ்டேஷனிலிருந்து இரண்டு பர்லாங் தெற்கில் சென்றதும் அநேக மோட்டார் பஸ்கள் நிற்குமிடத்தைப் பார்க்கிறோம். ஜனங்கள் திரள் திரளாக ஏறுவதையும், இறங்குவதையும் காண்கிறோம். வடக்கே தர்மபுரி, ஹொசூர், கிருஷ்ணகிரி, ஹரூர், கிழக்கே ஆத்தூர், தெற்கே ராசிபுரம், நாமக்கல், பரமத்தி, தென் மேற்கே திருச்செங்கோடு, சங்ககிரி துர்க்கம், கொமாரபாளையம், மேற்கில் ஓமலூர், மேட்டூர் அணை முதலிய பல இடங்களுக்குப் பஸ்ஸுகள் போகின்றன. பஸ்ஸுகள் நிற்குமிடத்திலிருந்து திருச்சி ரோட்டில் நாம் போவோம். அப்பாகத்தின் பெயர் குகை என்று சொல்லுவார்கள். இங்கே நெசவுத் தொழில் ஏராளமாய் நடைபெறுகிறது. சேலம் குகையில் நெய்யப்படும் வஸ்திரங்கள் பேர் பெற்றவை. இங்கிருந்தும், நகரின் மற்றொரு பாகமாகிய அம்மாபேட்டையிலிருந்தும் மாலை வேளைகளில் நெசவாளர்கள் சேலம் கடை வீதியில் வந்து கூடுவார்கள். தாங்கள் நெய்த புடவைகள், பட்டு வேஷ்டிகள், ஜமக்காளங்கள் முதலியவற்றை அங்குள்ள கடைகளுக்கு மொத்தமாக விற்பனை செய்துவிட்டு, வீடு திரும்புவார்கள். மாலை வேளையில் இந்த நெசவுத் தொழிலாளிகளின் கூட்டம் பார்க்க விசேஷமாக இருக்கும்.

சேலம் குகையிலிருந்து நாம் மேற்காகப் போய்ச் சற்று வடக்கே திரும்பினால் கோட்டையைக் காணலாம். கோட்டையில் சுந்தர பாண்டியத் தேவர் என்னும் பாண்டிய மன்னரால் கட்டப்பெற்ற ஒரு விஷ்ணு கோயில் இருக்கிறது; முகம்மதியர் பள்ளிவாசல் ஒன்றும் இருக்கிறது.

கோட்டையி லிருந்து வடக்கே வந்து, மெயின் ரோட்டில் மேற்காகப் போனால், செவ்வாய்ப்பேட்டை (சேலம் மார்க்கெட்) யைக் காணலாம். இங்கே தானிய வியாபாரமும், ஜவுளி வியாபாரமும் மிகுதி. பிரதி செவ்வாய்க்கிழமை தோறும் இங்குச் சந்தை கூடுகிறது. இது இந்த ஜில்லாவிலேயே மிகப் பெரியது. செவ்வாய்ப்பேட்டையில் பல பாங்கிகளும் கிறிஸ்தவர் கோயில்களும், பாடசாலைகளும் உள்ளன.

இராஜேந்திர மில் ஆபீஸ்.



சேலம் நகர் ப்ளான்
ஸ்கேல்:
1 அங்குலம் = 4 பர்லாங்கு.
மேட்டூர் அணைக்கு
சென்னைக்கு
சூரமங்கலம்
சேலம் ஜங்ஷன்
குன்றுகள்
ஈரோட்டிற்கு
மாந்தோப்பு
வடக்கு
தர்மபுரிக்கு
மாந்தோப்பு
மாந்தோப்பு
ஏர்க்காட்டிற்கு
மாந்தோப்பு
அஸ்தம்பட்டி
சீரங்கபாளையம்
ராமகிருஷ்ணாஸ்ரமம்
ராமகிருஷ்ணாபார்க்
C.ராஜகோபாலாச்சாரிரோட்
குமாரசாமிபட்டி
எக்டென்ஷன்
சிபாளையம்
அரி
சேலம் காலேஜ்
திருமணி முத்தாறு
மில்
லீபஜார்
மு.சத்திரம்
சேலம் மார்கெட் R.S.
வாகனேரி எக்டென்ஷன்
விருத்தாஜலத்துக்கு
ஆபீசுகள்
ஆஸ்பத்திரி
சேலம் டவுன் R.S.
கிழக்கு
சேலம் R.S.
பொன்னம்மா பேட்டை
அம்மாபேட்டை
மணிக்கூண்டு
முனிசிபல் ஆபீஸ்
டவுன் கடைவீதி
ஆத்தூருக்கு
அன்னதானப்பட்டி
கோவைக்கு
தருச்சிக்கு
குன்றுகள்

‘லீ பஜார்’ என்பது சேலம் மார்க்கெட் ஸ்டேஷனுக்கு அருகில் உள்ள ஒரு பெரிய தானிய வியாபார ஸ்தலம். இதனருகில் முனிசிபல் சத்திரமும் இராஜேந்திர மில்லும் இருக்கின்றன. இந்த மில்லில் இயந்திரங்களால் நூல் நூற்கும் தொழில்நடைபெறுகிறது.

செவ்வாய்ப் பேட்டையி லிருந்து வடக்கில் 2 மைல் தூரம் சென்றால், (சூரமங்கலம்) சேலம் ஜங்ஷனை அடையலாம். இங்கிருந்து சென்னைக்கும், ஈரோடு மார்க்கமாய்க் கோயமுத்தூருக்கும், மேட்டூர் அணைக்கும் விருத்தாஜலத்துக்கும் புகைவண்டிகள் போகின்றன.



இராமகிருஷ்ண ஆஸ்ரமம்.



சேலம் காலேஜ்

சேலம் ஜங்ஷனிலிருந்து தென் கிழக்காக வந்தால், நகரத்தின் வடபாகத்தில் ஏற்பட்டுள்ள அஸ்தம்பட்டி, பல எக்ஸ்டென்ஷன்கள், புதிய பங்களாக்கள், சீரங்கபாளையத்தில் உள்ள இராமகிருஷ்ண ஆஸ்ரமம், பார்க் முதலியவற்றைப் பார்க்கலாம். இப்பாகங்களில் பல எலிமெண்டெரி ஸ்கூல்களும், லிட்டில் பிளவர் ஹைஸ்கூலும், சேலம் முனிசிபல் காலேஜும், செஷன்ஸ் ஜட்ஜ் கோர்ட்டும், ஜில்லா கல்வி அதிகார ஆபீஸும்,கலெக்டர் ஆபீஸும் மற்றும் பல ஜில்லாத் தலைமை ஆபீஸுகளும் உள்ளன. பெரிய சிறைச்சாலையில் நேர்த்தியான கம்பளிகள் மரச்சாமான்கள் முதலியன கைதிகளால் செய்யப்படுகின்றன.

இனி அங்கிருந்து சேலம் டவுன் ஸ்டேஷனைத் தாண்டித் தெற்காக வருவோம். வழியில் ஆஸ்பத்திரி, போலீஸ், ஜில்லா காரியாலயம், ஜில்லா போர்டு ஆபீஸ், முனிசிபல் ஆபீஸ், லண்டன் மிஷன் ஹைஸ்கூல், பெண்கள் உயர்தரப் பாடசாலை, கோகுலநாத ஹைஸ்கூல் முதலியவற்றைக் காண்கிறோம்.

அங்கிருந்து கிழக்கே திருமணிமுத்தாற்றைக் கடந்து போவோம்.



சேலம் மணிக்கூண்டு

சேலம் பாங்கிக் கட்டிடத்தின் மீதுள்ள மணிக்கூண்டு, போலீஸ் டவுன் ஸ்டேஷன், ஜில்லா ஹெட் போஸ்டாபீஸ், அதற்குத் தெற்கில் விக்டோரியா மார்க்கெட் முதலியவற்றைக் காண்போம்.

இவ்வூர்ப் பெரிய கடைத்தெரு, செவ்வாய்ப்பேட்டையில் மேற்குக் கோடியில் ஆரம்பித்து, கிழக்கே சேலம் ஸ்டேஷன் வரையில் 4 மைல் நீளம் இருக்கிறது. அது நேர்த்தியான தார் போடப்பட்ட ரஸ்தா. சதா மோட்டார்களும் ஜட்கா வண்டிகளும் அங்கே ஓடிக் கொண்டே இருக்கின்றன.

சேலம் டவுன், கடைவீதி

கடை வீதியில் நடுப் பாகத்தில் அநேக பண்டக சாலைகள், ஜவுளிக் கடைகள், மளிகைக் கடைகள் இருப்பதைப் பார்க்கலாம்.

இந்த நகர் நாளுக்கு நாள் விருத்தியாகி வருகிறது. இது சிறந்து விளங்குவதற்குக் காரணங்கள் எவையாக இருக்கலாம்? ஜில்லாவின் முக்கிய பட்டணம் என்பது ஒன்று. நான்கு இடங்களிலிருந்து இருப்புப் பாதைகள் வந்து கூடுவது இரண்டாவது காரணம். மலை வாச ஸ்தலமாகிய ஏர்க்காட்டிற்குப் போகும் ரஸ்தாவில் உள்ளது மூன்ருவது காரணம். வியாபாரமும், கைத்தொழிலும் இந்நகரில் அதிகமாக நடைபெறுகின்றன. இந்நகரம் புராதனமானது என்றும், சரித்திர சம்பந்தமானது என்றும் அறிகிருேம்.

இந்நகர் ஒரு பெரிய முனிஸிபாலிடி. சேலம் டவுன், செவ்வாய்ப் பேட்டை, குகை, கோட்டை, அம்மாப் பேட்டை, வரகனேரி எக்ஸ்டென்ஷன், சீரங்கபாளையம், திருச்சி ரோடு, குமாரசாமி பட்டி, அரிசிபாளையம் பொன்னம்மா பேட்டை, மேட்டுத் தெரு முதலியன இந்நகரின் முக்கிய பாகங்கள்.

—

2. ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம்

பிள்ளைகளே, இந்த ஜில்லாவின் முக்கியமான தோற்றங்களை ஒருவன் அறிய விரும்பினல், அதை சுற்றிப் பார்ப்பது அவசியமாகிறது. அப்படிப் பிரயாணம் செய்வதற்குப் பல வசதிகள் இருக்கின்றன. அவை (1) சாலை மார்க்கம், (2) இருப்புப்பாதை மார்க்கம் என்பன.

1 சாலை மார்க்கம்

நமது ஜில்லாவின் தலை நகராகிய சேலம் டவுனிலிருந்து மேற்காகப்

பிரயாணம் செய்வோம். வட மேற்கே ஒரு மோட்டாரில் ஏறிச் சாலை மார்க்கமாய் ஓமலூருக்குப் போவோம். வழி சற்று உயர மான பாகத்தில் போகிறது. இடப் புறமாகச் சுண்ணும்புக் கல்பாறை தெரிகிறது. அங்கே ஒரு கம்பனி யார் பிங்கான் களைச் செய்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற னர். சிறிது நேரத்தில் ஓமலூர் சேர்ந்தோம். இங்கிருந்து நேர் மேற் காகப் பிரயாணம் செய்து, மேச்சேரி யைத் தாண்டி மேட்டூர் அணையைக்



மேட்டூர் தேக்கம் வளைவு பாலம்

காண்போம். இவ்வணையின் கிழக் குப் பாகத்தில் கட்டப்பட்டுள்ள பெரிய மதகின் வளைவுப் பாலம் மிகவும் அழகாக இருக்கிறது. சேலம்—மேட்டூர் இருப்புப்பாதை இங்கே முடிகிறது. மேட்டூருக்கு அருகில் பாதை, மலையைக் குடைந்த ஓரிடத்தில் செல்லும் காட்சி அற்புத மானது. ஆற்றுக்கு அக்கரையில் மேட்டூர் டவுன் அமைந்துள்ளது. ஓமலூரிலிருந்து மேட்டூர் செல்லும் வரையில் நிலம் செவ்வல் மண். எங்குப் பார்த்தாலும் புன்செய்ப் பயிர்கள் விளைவு அதிகம்.

மேட்டூரிலிருந்து புறப்பட்டு, நேர் வடகிழக்காகச் சென்று தர்மபுரியை அடைவோம். வழியில் தொப்பூர்க் கணவாய் மார்க்கமாகவும், தொப்பூர் நதியைக் கடந்தும் சென்றோம். நிலம் வளமற்றது என்று சொல்ல லாம். தொப்பூர் என்ற ஊர் அக்கண வாயின் ஆரம்பத்திலிருக்கிறது.

தர்மபுரியில் பல ஊர்களிலிருந்து வரும் சாலைகள் ஒன்று கூடுகின்றன. தகடூர் என்பது இதன் பழைய பெயர். இவ்வூருக்கு முன்புறத்தில் ஒரு பெரிய தூணும், பீடமும் இருக்கக் காண்கிறோம். எங்குப் பார்த்தா லும் எண்ணெய்ச் செக்குகள் இருக் கின்றன. ஆகையால் இவ்வூரி லிருந்து எண்ணெய் ஏற்றுமதி யாகின்றது.

இனித் தர்மபுரியி லிருந்து வட மேற்கே செல்லுவோம். பாதை காடுகளின் மத்தியில் போகிற தென் பதைப் பார்க்கிறோம். பூமி போகப் போக உயர்ந்து கொண்டே போகி றது. இப்பிரதேசம் மைசூர் பீடபூமி யைச் சார்ந்தது. சாலையின் இரு பக்கங்களிலும் உள்ள பூமி செழிப் பானது அல்ல. இங்குள்ள காடு களில் விலை யுயர்ந்த மரங்கள் உள் ளன. எங்குப் பார்த்தாலும் குன்று கள் தென்படுகின்றன.

இப்பொழுது நாம் இப்பிரதேசத் தில் மிக உயர்ந்த ஸ்தானமாகிய ஹொசூர் வந்து சேர்ந்து விட் டோம்.

இவ்வூரிலிருந்து பெங்களூர் 25 மைல் தூரம்தான். பல பக்கங்களுக் கும் சாலைகள் போகின்றன. அருகில் இருக்கும் குன்றின்மீது ஓர் கோட் டையையும், அதில் ஒரு கோவிலையும் காண்கிறோம்.


சேலம் ஜில்லா
இருப்புப்பாதைகளும், சாலைகளும்
ஸ்கேல்:
1 அங்குலம் = 15 மைல்.
மைசூர் ராஜ்யம்
வட ஆற்காடு ஜில்லா
தென் ஆற்காடு ஜில்லா
கோயமுத்தூர் ஜில்லா
திருச்சிராப்பள்ளி ஜில்லா
பாகலூர்
ஹோசூர்
பேரிக்கை
சூலகிரி
தளி
கேலமங்கலம்
டெங்கணிக் கோட்டை
நாகதுணை
இராயகோட்டை
காவேரிப் பட்டணம்
கிருஷ்ணகிரி
பர்கூர்
மத்தூர்
சாமல்பட்டி
ஊத்தங்கரை
திருவண்ணாமலைக்கு
மாரண்டஹல்லி
பாலக்கோடு
தொட்டம்பட்டி
தர்மபுரி
பென்னகரம்
மொரப்பூர்
ஹரூர்
தொப்பூர்
பொம்மிடி
லோகூர்
காவேரி நதி
மேட்டூர் அணை
மேச்சேரி
ஓமலூர்
தாரமங்கலம்
ஏர்க்காடு
மஞ்சவாடிக்கணவாய்
சேலம்
ஏத்தாப்பூர்
பெ. நா. பாளையம்
கலவாசல்
ஆத்தூர்
குமாரபாளையம்
சங்ககிரி
மகுடஞ்சாவடி
இராசிபுரம்
காவேரி
திருச்செங்கோடு
சேந்தமங்கலம்
நாமக்கல்
எரோட்டுக்கு
பரமத்தி
திருச்சிக்கு
இருப்புப்பாதை
சாலை

ஹொசூரிலிருந்து புறப்பட்டுத் தென் கிழக்காகச் செல்லுவோம். பாதை தாழ்வான இடத்தில் போவதை உணர்கிறோம். இப்பிரதேசத்தில் தென் பெண்ணையாறும், அதன் உபநதியாகிய மார்கண்ட நதியும் பாய்வதால், பூமி செழிப்பாயுள்ளது. தென்னை, கரும்பு முதலியன நன்கு பயிராகின்றன. இப்பிரதேசத்தில் அநேக கரும்பாலைகள் உள்ளன. இரு பக்கங்களிலும் இயற்கையின் காட்சி அற்புதமா யிருக்கிறது. நாம் இப்போது கிருஷ்ணகிரியை அடைகிறோம். இங்கிருந்து சென்னைக்கும் பெங்களூருக்கும், தர்மபுரிக்கும் சாலைகள் பிரிந்து போகின்றன. இப்பட்டணம் பாராமஹால் பிரதேசத்தில் உள்ளவைகளில் மிகப் பெரியது. இவ்வூருக் கருகில் ககனகிரி என்ற மலையில் ஒரு பலமான கோட்டை இருக்கிறது. இவ்வூரில் சர்க்கார் வைத்திய சாலையும், ஒரு ஹைஸ்கூலும் இருக்கின்றன.

இவ்வூரிலுள்ள பல அழகான கோவில்களையும் குளங்களையும் பார்ப்போம். இவ்வூர் ஒரு ரயில்வே ஸ்டேஷன்.

கிருஷ்ணகிரியி லிருந்து கிழக்காகச் செல்லுவோ மானால், மாத்தூர், சாமல்பட்டி இவைகளைத் தாண்டிச் சிங்காரப்பேட்டை என்னும் ஊரை அடைவோம். வழியில் இருப்புப் பாதையையும் பாம்பாற்றையும் தாண்டி வந்தோம்.

சிங்காரப்பேட்டையில் பாய் முடைகிறார்கள். இவ்வூர் ஓர் சிறிய வியாபார ஸ்தலம். இங்கிருந்து தேன் ஆவாரம்பட்டை, மெழுகு, மூங்கில் முதலியவை ஏற்றுமதி யாகின்றன.

இவ்வூரிலிருந்து தெற்காகப் புறப்படுவோமானால், பாதை, காட்டு வழியாகப் போவதை உணர்வோம். கிழக்குப் பாகங்களில் மலைகள் அடர்ந்துள்ளன.

கொஞ்ச நேரத்தில் ஊத்தங்கரையை அடைவோம். இவ்வூரில் மலேரியா காய்ச்சல் உண்டாகிறது. இதற்குத் தெற்கில் பிரயாணம் செய்யும் போது தென் பெண்ணையாறு குறுக்கிடுகிறது. இந்நதிக்கு இவ்விடம் பாலம் இல்லை. ஜலம் அநேகமாய் இல்லாமலிருப்பதால் ஆற்றில் வண்டியை ஓட்டிச் செல்லலாம்.

இப்போது நாம் ஹரூர் வந்து சேர்ந்தோம். இப் பிரதேசத்தில் கம்பு, கேழ்வரகு, சோளம், கொள்ளு, புகையிலை, முசுக்கொட்டை முதலியவை பயிராவதைப் பார்க்கலாம். ஹரூருக்கு அருகில் மொரப்பூர் ஜங்ஷன் இருக்கிறது.

பிறகு நாம் தென் மேற்காக மஞ்சவாடிக் கணவாய் மார்க்கமாய்ச் சேர்வராயன் மலையின் அடிவாரத்திற்கு வந்தோம். அங்கிருந்து புறப்பட்டுச் சேலம் நகரை அடைகிறோம். மஞ்சவாடிக்கணவாய் மார்க்கமாய்ப் பிரயாணம் செய்யும் போது சந்தோஷமாய் இருந்தது.

இனி நேர் கிழக்காகப் பிரயாணம் செய்வோம். இப் பாதை வசிஷ்ட நதிக்கும் இருப்புப் பாதைக்கும் இடையில் செல்லுகிறது. இது மிகவும் செழிப்பான பிரதேசம். வடக்கில் உள்ள மலையின் காட்சி பார்க்கத் தருந்தது. இப் பிரதேசத்தில் சோளம், கொள்ளு, கடலை, புகையிலை, பாக்கு, தென்னை முதலி

யன விசேஷமாய்ப் பயிராகின்றதைப் பார்ப்போம்.

வழியிலுள்ள ஏத்தாப்பூர், பெத்த நாயக்கன் பாளையம் முதலிய ஊர்களைக் கடந்து ஆத்தூரை அடைவோம். இது சுற்றிலும் விளையும் தானிய வகைகளுக்கு ஒரு வியாபார ஸ்தலமாக இருக்கிறது. ஆத்தூருக்கு வடக்கில் உள்ள மலைகளில் விலையுயர்ந்த மரங்களும், காட்டுப் பொருள்களும் கிடைக்கின்றன.

இங்கிருந்து திரும்பித் தென் மேற்காகச் செந்தாரப்பட்டி மார்க்கமாய் இராசிபுரம் அடைவோம். இப்பிரதேசத்தில் சுவேத நதி பாய்வதால் இது செழிப்பாக இருக்கிறது. புகையிலை, கரும்பு, தென்னை நெல், வெற்றிலை, எள்ளு முதலியன இங்குப் பயிராகின்றன. இவ்விடத்தில் செய்யப்படும் தம்மம்பட்டிச் சுருட்டும் இராசிபுரம் வெல்லமும் பேர் பெற்றவை.

அங்கிருந்து தெற்கில் உள்ள நாமக்கல் நோக்கிப் பிரயாணம் செய்வோம். இது வளமற்ற பிரதேசம் புன்செய்த் தானியங்கள் சில இடங்களில் பயிராகின்றன. இப்போது நாம் நாமக்கல்லை அடைந்துவிட்டோம்.

இச்சிறு பட்டணம் அப்பெயர் கொண்டமலை அடிவாரத்தில் இருக்கிறது. மலையின் மீதுள்ள கோவில் பிரசித்திபெற்றது. இங்குப் பல சாலைகள் வந்து சேருகின்றன. இவ்வூரைச் சுற்றியுள்ள பிரதேசம் மேட்டுப் பாங்கான நிலம். இங்கே நீர் வசதி குறைவு. மழை பெய்தால் வேளாண்மை யுண்டு.

இனி நாம் நாமக்கல்லிலிருந்து வடமேற்காகப் பிரயாணம் செய்வோம். இப்பிரதேசம் களி மண் கலந்த செம்மண் தரையாய் உள்ளது. சோளம், கொள்ளு, துவரை, பருத்தி, கடலை முதலியன இங்கு பயிராகின்றன. இப்பாதைக்கு மேற்கே காவேரியின் நீரால் பாசனம் நடைபெறும் பாகத்தில் மட்டும் நெல், வெற்றிலை, வாழை இவைகள் பயிராகின்றன.

இப்போது நாம் திருச்செங்கோடு வந்து சேருவோம். இவ்வூருக்குத் தென் கிழக்கில் உள்ள குன்றைப் பார்க்கிறோம். அதன் மேல் ஏறுவோம். சுற்றிப் பார்த்தால் மேற்கே தூரத்தில் உள்ள காவேரியாற்றைக் காணலாம். மலையின் மீதுள்ள அர்த்த நாரீஸ்வர ஸ்வாமியைத் தரிசனம் செய்து கொண்டும், பலடிக் கல்லைப் பார்வையிட்டும் கீழிறங்கி வருவோம்.

இவ்வூரிலிருந்து வடமேற்காகவே பிரயாணம் செய்து கொமாரபாளையம் வந்து சேருகிறோம். இவ்வூர் காவேரியின் கரையிலுள்ளது. இங்கிருந்து சாலை, காவேரியின்



காவேரிப் பாலம்

குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலத்தின் மீது பவானி, ஈரோடு மார்க்கமாய்க் கோயமுத்தூருக்குச் செல்லுகிறது.

இவ்வூருக்கு எதிர்க் கரையில் பவானி இருக்கிறது. அவ்வூர் கோயமுத்தூர் ஜில்லாவைச் சேர்ந்தது. கொமாரமாளையத்திலிருந்து கிழக்கே திரும்பி, 13 மைல் தூரத்திலுள்ள சங்ககிரி துர்க்கம் என்னும் ஊருக்குப் போவோம். இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இவ்வூர் தேக சௌக்யத்திற்கு ஏற்றது. ஆகையால் இவ்வூர், தாலூகாவின் முக்கிய பட்டணமாக இல்லாத போதிலும் இங்கு ஜில்லா முன்சீப் கோர்ட்டு, டிப்டி கலெக்டர் ஆபீஸ் இவைகள் இரண்டும் இருக்கின்றன. இவ்வூரின் நான்கு பக்கங்களிலும் பல குன்றுகள் இருப்பதைக் காணலாம். ஆகையால் தான் இவ்வூருக்குச் சங்ககிரி துர்க்கம் எனப் பெயர் உண்டாயிற்று. இங்கிருந்து ஒரு சாலை வடக்காகத் தாரமங்கலம் மார்க்கமாக ஓமலூருக்குச் செல்லுகிறது.

சங்ககிரியிலிருந்து வட கிழக்காகச் சென்று, மகுடஞ்சாவடி மார்க்கமாய்ப் பிரயாணம் செய்வோம். இப் பிரதேசம் வளமற்றது. இங்கும் புன் செய்த் தானியங்கள் பயிராகின்றன. கடைசியில் நாம் சேலம் வந்து சேர்ந்துவிட்டோம்.

பயிற்சி

1, நமது ஜில்லாவில் எங்கெங்கே கருப்பாலைகள் உள்ளன?

2. வசிஷ்ட நதிப் பாசனத்தால் உண்டாகும் பயிர்கள் யாவை?

3. மஞ்சவாடிக் கணவாய் எங்கிருக்கின்றது?

4. நாமக்கல்—திருச்செங்கோடு ரஸ்தாவின் மேற்குப் பாகத்தில் வெற்றிலையும், வாழையும் பயிராகின்றன. ஏன்?

5. சேலத்திலிருந்து ஆத்தூர் போகும் ரஸ்தாவில் உள்ள இரண்டு செழிப்புள்ள ஊர்களைச் சொல்.

6. ஊத்தங்கரையைச் சுற்றி என்ன பயிராகின்றது?

7. 'சங்ககிரி துர்க்கம்' என்ற ஊரில் உள்ள விசேஷங்களைச் சொல்.

2 ரயில் மார்க்கம்

சேலம் டவுன் ஸ்டேஷனிலிருந்து சேலம் ஜங்ஷனுக்குச் சென்று, அங்கிருந்து ஒருவன் ரயில் மார்க்கமாய் வடக்காகப் பிரயாணம் செய்தால், அடுத்த ஸ்டேஷன் கருப்பூர் ஆகும். அது வரையில் பூமி சமநிலமாயிருக்கிறது. மண் வெண்மையான சிறு சுண்ணும்புக் கற்கள்



சேலம் ஜங்ஷன்

கலந்துள்ளது. இவ்விடத்தில் ஒரு பீங்கான் தொழிற்சாலை நடை பெறுகிறது.

அவ்விடமிருந்து வடக்கே சென்றால், இருப்புப் பாதையின் இரு பக்கங்களிலும் மேட்டுப்பாங்கான பூமியுளது. நிலம் உயர்ந்து கொண்டே போகிறது. வலப்பக்கம் சேர்வராயன் மலை இருப்பதைக் காணலாம். அடுத்துள்ள தின்னப்பட்டி ஸ்டேஷனிலிருந்து கணவாய் ஆரம்பமாகிறது. இதன் பெயர் பொம்மிடிக்கணவாய். வழியிலுள்ள லோகூர் ஸ்டேஷனைச் சுற்றிலும் அடர்ந்த காடுகள் உள்ளன. அதைத் தாண்டினல் மொரப்பூர் ஜங்ஷனை அடைவோம்.

இப் பிரதேசத்தில் இருப்புப் பாதையின் இரு பக்கங்களிலும் கொள்ளு, கம்பு, சோளம், முதலிய புன்செய்ப் பயிர்கள் விளைகின்றன. இங்குப் பல வியாபாரிகள் வந்து, உளுந்து, கொள்ளு முதலியவற்றை வாங்கித் தங்கள் ஊர்களுக்கு ஏற்று மதி செய்கிறார்கள். மொரப்பூர் ஜங் ஷனிலிருந்து ஒரு பாதை பிரிந்து வடமேற்காகப் போகிறது. இப் பாதை மிகவும் குறுகியது. (Narrow Gauge). ரயில் வண்டி நிதானமாகத் தான் செல்லுகிறது,

இந்த வண்டியில் பிரயாணம் செய் யும் பொழுது மேட்டுப் பாங்கான பிரதேசத்தில் போவதைக் காண்கி றோம். சில குன்றுகளைக் கடந்து கொண்டும், ராணி முக்கனூர், செம் மணஹள்ளி, ஸ்டேஷன்களைத் தா ண்டியும் தர்மபுரி ஸ்டேஷனை அடைவோம்.

இங்கு நெல், சோளம், கரும்பு, எள்ளு, வாழை முதலிய பயிர்கள் விளைகின்றன. இஃதோர் சிறந்த வியாபார ஸ்தலம் எண்ணெய் ஆட்டுதல், துணி நெசவு முதலியன இங்குள்ள கைத்தொழில்கள்.

தர்மபுரியி லிருந்து வடமேற்கே சென்றால், பீடபூமிப் பிரதேசத்தில் பிரயாணம் செய்வோம். இது வள மற்ற புன்செய்ப் பூமிகள் அடங்கி யுள்ளது. பாலக்கோடு, தளவாய் ஹள்ளி, மாரண்ட ஹள்ளி, ராயக் கோட்டை, நாக துணை, கேலமங்க லம் முதலிய ஸ்டேஷன்களைத் தாண்டி ஹொசூரை அடைகிறோம் வழியிலுள்ள இயற்கையின் தோற் றங்கள் சந்தோஷகரமாய் இருக்கின் றன. சனத் குமார நதி, பாலாறு முதலியவற்றைக் கடந்து சென் றோம்.

ஹொசூரில் அந்த இருப்புப் பாதை முடிவு அடைவதால், நாம் அங்கிருந்து திரும்பி மொரப்பூர் ஜங்ஷனுக்கு வந்து பெரிய இருப்புப் பாதையில் நேர் வடக்கே செல்லு வோம். இங்குப் பூமி செழிப்பாக இருக்கின்றது. இப்பிரதேசத்தில் தென் பெண்ணையாறு, பாம்பாறு, கம்பை நல்லூர் ஆறு முதலியவை கள் பாய்கின்றன. வழியிலுள்ள தொட்டம்பட்டி, தாசம்பட்டி, சாமல் பட்டி ஸ்டேஷன்களைத் தாண்டி வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள திருப்பத்தூர் நகரை அடைவோம். அவ்வூர் நமது ஜில்லாவிலுள்ள வடகிழக்கு எல்லையில் இருக்கிறது. இது ஒரு ரயில்வே ஜங்ஷன் அந்த ஜங்ஷனிலிந்து நமது ஜில்லாவிலுள்ள கிருஷ்ணகிரியை நோக்கி இருப்புப்பாதை மார்க்க மாய்ப் பிரயாணம் செய்வோம். இது குறுகிய பாதை. இப் பிரதேசம் சற்றுப் பீட பூமியே. இங்கு நெல், துவரை, எள்ளு, தென்னை, திராக்ஷை முதலிய பயிர் கள் விளைகின்றன. வழியில் உள்ள பெரியகரம், பெரிய கந்திலி, பர் கூர், கண்டிக்குப்பம் ஸ்டேஷன்க ளைத் தாண்டிக் கிருஷ்ணகிரியை அடைகிறோம். இந்நகரில் உள்ள விசேஷங்களை முன்பு சாலை மார்க்க மாய்ச் செய்த பிரயாணத்தில் பார்த் திருக்கிறோம். இந்த இருப்புப் பாதை இவ்வூரில் முடிவதால், நாம் திரும்பித் திருப்பத்தூர் ஜங்ஷன் மார்க்கமாய்ச் சேலம் ஜங்ஷன் போய்ச் சேருவோம்.

அதன் பின் சேலம் ஜங்ஷனி லிருந்து மேற்காகச் செல்லும் இருப்

புப் பாதையில் பிரயாணம் செய்வோம். இப்பாதை மேட்டூர் அணைக்குச் செல்லும் 'பிராட்கேஜ்' பாதை. முதலில் ஓமலூர் ஸ்டேஷனை அடைவோம். அதைச் சுற்றியுள்ள பிரதேசம் வளமற்றது. இங்குப் பாயும் சரபங்க நதி எப்போதும் வறண்டிருப்பதைக் காண்கிறோம். பிறகு மேச்சேரி ஸ்டேஷன் மார்க்கமாய் மேட்டூர் அணை ஸ்டேஷனைச் சேருவோம். அப்பாதை இங்கு முடிகிறது. ஸ்டேஷனிலிருந்து அணை வெகு சமீபம். அணையைப் பற்றி முன்பு படித்திருக்கிறோம். அணையின் கிழக்குப் பக்கத்தில் ஓர் அகன்ற மதகு உயர்ந்த இடத்தில் வளைவாகக் கட்டுப்பட்டுள்ளது. அதன் காட்சி பாக்க அற்புதமாயிருக்கும்.

மேட்டூரிலிருந்து திரும்பிச் சேலம் ஜங்ஷனுக்குப் போவோம். அங்கிருந்து தபால் வண்டியில் ஏறித் தென் மேற்காகச் செல்லுவோம். பாதை தாழ்ந்த இடத்தில் போவதைப் பார்க்கிறோம். முதலில் நாம் பார்க்கிற ஸ்டேஷன் வீரபாண்டி ரோட். இதற்கு வடக்கில் செங்குத்தான குன்று ஒன்று இருக்கின்றது. இப்பிரதேசம் வளமற்ற பூமி.

அவ்விடமிருந்து மகுடஞ்சாவடி மார்க்கமாய்ச் சங்ககிரி துர்க்கம் ஸ்டேஷனை அடைகிறோம். இந்த ஸ்டேஷனில் இறங்கித் தான் திருச்செங்கோடு க்ஷேத்திரத்திற்குப் போக வேண்டும்.

பிறகு நாம் தென் மேற்காகவே சென்றால், காவேரி என்னும் ஸ்டேஷனை அடைகிறோம். இங்குக் காவேரி யாற்றுக்கு ரயில் பாலம் மிகவும் பலமாகக் கட்டப்பட்டுள்ளது. அப்பாலத்தின் மீது புகை வண்டி



காவேரி ரயில் பாலம்

ஓடும்போது இரு பக்கங்களிலும் பாருங்கள். ஆற்றில் ஜலம் எவ்வளவு வேகத்துடன் பாய்கிறது! நாம் காவேரியிலிருந்து ஈரோடு ஜங்ஷன்போய்ச் சேருகிறோம். இது கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ளது. ஆகையால் நாம் சேலம் ஜங்ஷனுக்குத் திரும்புவோம்.

பிறகு நாம் புறப்பட்டுக் கிழக்கே செல்லுவோம். சேலம் மார்க்கெட், சேலம் டவுன், கிழக்குச் சேலம் முத



சேலம் மார்க்கெட் ரயில்வே ஸ்டேஷன்

லிய நகரைச் சேர்ந்த ஸ்டேஷன்களைப் பார்ப்போம்.

சேலம் மார்கெட் கூட்ஸ் ஷெட்டிலிருந்து ஏராளமான தானிய மூட்டைகள், சீமைச் சரக்குகள், ஓடுகள் முதலியன இறக்குமதி யாகின்றன.

அப்பால் கிழக்கே பிரயாணம் செய்யும்போது பார்த்தால், நிலம் சம தரையாக இருக்கிறது. வழியில் வத்தாப்பூர், பெத்த நாய்க்கம் பாளை யம் முதலிய செழிப்பான கிராமங் களின் அருகே இருப்புப் பாதை போகிறது. அப்பிரதேசத்தில் வசிஷ்ட நதி, சுவேத நதி இவை பாய்கின் றன. சற்று நேரத்தில் நாம் ஆத் தூரை அடைகிறோம். இது ஓர் வியா பார ஸ்தலம். வடக்கில் உள்ள காடு களில் மலைப்பயிர்கள் உண்டாகின்றன. ஆத்தூரிலிருந்து தலைவாசல் என் னும் ஸ்டேஷனை நோக்கிச் செல்லு வோம். வழியில் வசிஷ்ட நதியைக் கடக்கிறோம். இப்போது நாம் நமது ஜில்லாவின் கிழக்கு எல்லையில் வந்து விட்டோம். ஆகையால் திரும்பிச் சேலம் டவுன் போய்ச் சேருவோம்.

பயிற்சி

1. சேலம் டவுனிலிருந்து ஆத்தூர் மார்க் கம் போனல், நீ கடக்கவேண்டிய இரண்டு முக்கிய ஸ்டேஷன்களைச் சொல்லு.
2. பொம்மிடிக் கணவாய் எந்த இரண்டு ஜங்ஷன்களுக் கிடையே இருக்கிறது?
3. சேலம் ஜங்ஷனிலிருந்து புகைவண்டி அதி வேகமாய்ச் செல்லுகிறது—ஏன்?
4. மொரப்பூர் ஜங்ஷனிலிருந்து ஹொசூ ருக்குச் செல்லும் இருப்புப் பாதை யைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?
5. சேலம் நகரத்தைச் சேர்ந்த ரயில்வே ஸ்டேஷன்களைச் சொல்லு.

இருபத்தோராம் பாடம்

வியாபாரம்

வியாபாரம்:-நமக்குத் தேவையான உணவும் பதார்த்தங்களும், ஆடை களும், மற்ற வஸ்துக்களும், நாம் வசிக்கும் இடத்திலேயே உற்பத்தி யாகின்றனவா? நம் ஊரில் உற்பத்தி யாகாத நமக்குத் தேவையான சாமான்களை வேறு இடங்களில் இரு ந்து பணம் கொடுத்து வாங்கிக் கொள்ளுகிறோம். அளவுக்கு அதிக மாக நம் ஊரில் உற்பத்தியாகும் பொருள்களைப் பணத்திற்கு விற்ப தற்கு வெளியூர்களுக்கு அனுப்பு கிறோம்.

இப்படிச் சாமான்களை வாங்குவ தும், விற்பது வியாபாரம் எனப் படும். வெளியூர்களுக்கு அனுப்பு வதை ஏற்றுமதி என்றும், வெளியூர் களிலிருந்து கொள்வதை இறக்கு மதி என்றும் சொல்லுகிறோம்.

சிலர் ஓரிடத்தில் அதிகமாகக் கிடைக்கும் பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்கி, அவை கிடைக்காத இடங்களில் கொண்டு போய் அதிக விலைக்கு விற்கிறார்கள். இப்படிச் செய்பவர்களுக்கு வியாபாரிகள் என்று பெயர். இந்த ஜில்லாவில் அனேகர் வியாபாரம் செய்து ஜீவிக் கின்றனர்.

தாரமங்கலம், சேலம் குகை, கொமாரபாளையம் முதலிய இடங் களில் உள்ள தேவாங்கச் செட்டி யார்கள் பெருத்த ஜவுளி வியாபாரி களாக விளங்குகின்றனர். ஹிந்துக் களில், வைசியர்கள், நவதானியம், பலசரக்கு, ஜவுளி முதலான சாமான் களும், முகம்மதியர்கள், ஜவுளி, தோல், மாம்பழம் முதலியனவும் வியாபாரம் செய்கின்றனர்.

நமது ஜில்லாவிலிருந்து முக்கிய மாகப் பருத்தி, கடலை, கடலை எண் ணெய், மிளகாய், பீங்கான் பாத்தி

ரங்கள், கற்சட்டிகள், புளி, மரப் பட்டைகள், பதனிடாத தோல், சீயக் காய், பட்டு வஸ்திரங்கள், துவரைப் பருப்பு, காப்பிக்கொட்டை, திராக்ஷை, மாம்பழங்கள், மாஞ்செடிகள் முதலி யன வெளி இடங்களுக்கு ஏற்றுமதி யாகின்றன.

வெளியிடங்களி லிருந்து நமது ஜில்லாவுக்கு மண்ணெண்ணெய், நெருப்புப் பெட்டிகள், கண்ணாடிச் சாமான்கள், அரிசி,மருந்துகள், சர்க் கரை, உப்பு, இயந்திர சாமான்கள், எனமல் பாத்திரங்கள், காகிதம், சீமைத் துணிகள், சீமை நூல், ஜரிகை செம்பு, பித்தளைத் தகடுகள் முதலியன இறக்குமதியாகின்றன.

தவிரவும், இந்த ஜில்லாவில் பெரிய ஊர்களில் வாரத்திற்கு ஒரு முறை சந்தைகள் கூடும் அவற்றிற் குப் பல இடங்களிலிருந்து நவ தானியங்களும், பலசரக்குச் சாமான் களும், காய்கரிகளும் ஏராளமாக வருகின்றன. ஜனங்கள் தங்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்கிக் கொள்ளுவார்கள்.

நமது ஜில்லாவின் உள் நாட்டு வியாபாரம், பொதுவாக ரஸ்தாக்க ளில் வண்டிகள் மூலமாகவும், சிறு பான்மை மோட்டார் லாரிகள் மூல மாகவும் நடைபெறுகின்றன. வெளி ஜில்லாக்களுடன் இருப்புப்பாதை மூலமாக வியாபாரம் நடை பெறு கிறது.

பயிற்சி

1. ஏற்றுமதி, இறக்குமதி என்றால் என்ன?
2. நமது ஜில்லாவின் ஏற்றுமதிச் சரக்கு கள் நான்கும், இறக்குமதிச் சரக்குகள் ஐந்தும் சொல்லு.
3. இந்த ஜில்லாவின் உள்ள சந்தைகள் மூன்று சொல்லு.

நெ.	தாலுகா	ஏற்றுமதிச் சாமான்கள்
1	சேலம்	சாப்பி, கிச்சிலி, மாம்பழம், தோல், பீங்கான் சாமான்கள் மாஞ்செடிகள், பட்டுத்துணி.
2	ஓமலூர்	கற்சட்டி
3	தர்மபுரி	எண்ணெய்
4	ஹொசூர்	தோல்
5	கிருஷ்ணகிரி	திராக்ஷை
6	ஹரூர்	மிளகாய், எள், துவரை
7	ஆத்தூர்	வெல்லம், கற்சட்டி, புகையிலை
8	நாமக்கல்	கற்சட்டி
9	திருச்செங்கோடு	கதர் துணி, பருத்தி, துவரைப் பருப்பு.

சீதோஷ்ண நிலை; அதற்கும் தாவரங்களுக்கும் மனித வாழ்க்கைக்கும் உள்ள சம்பந்தம்

தம்பி:-அண்ணா, நமது தகப்பனார் எங்கே போயிருக்கிறார்?

அண்ணன்:-தம்பி, அவர் கோடைக் கானலுக்குப் போயிருக்கிறார். அவர் திரும்பி வர இன்னும் ஒரு மாதம் செல்லும்.

த:-அங்கே அவர் எதற்காக ஒரு மாதம் தங்குகிறார்?

அ:-இப்பொழுது கோடைக் கால மல்லவா? இங்கு எவ்வளவு உஷ்ணமாயிருக்கிறது! அதனால் தான் நமது பாடசாலையிலும் விடுமுறை விட்டிருக்கிறார்கள். கோடைக்கானல் குளிர்ச்சியாயிருக்கும். ஆகையால் நமது பிதா அங்கே ஒரு மாதம் இருந்து விட்டு வருவார்.

த:-இங்கு இவ்வளவு உஷ்ணமாயிருக்கும் பொழுது கோடைக்கானலில் மாத்திரம் குளிர்ச்சியா யிருப்பதன் காரணம் என்ன?

அ:-நமது ஊர் தாழ்ந்த சம வெளியிலிருக்கிறது. நமது தேசமும் உஷ்ணதேசம். ஆதலால் இங்கு உஷ்ணமாயிருக்கிறது. கோடைக்கானல் உயரமான மலைப் பிரதேசம். ஆகையால் அங்குக் குளிர்ச்சியாயிருக்கிறது.

த:-அண்ணா, கோடைக்கால வாசத்துக்கு ஜனங்கள் இன்னும் எங்குச் செல்லுகிறார்கள்?

அ:-சிலர் நீலகிரி மலையிலுள்ள உதகமண்டலத்துக்குப் போகிறார்கள். வேறு சிலர் மண்டபம், கன்னியாகுமரி முதலிய கடற்கரையிலுள்ள ஊர்களுக்குச் செல்லுகிறார்கள்.

த:-கடற் கரைக்கு ஏன் செல்லுகிறார்கள்?

அ:-கடற் கரையில் அடிக்கடி கடற் காற்று வீசிக்கொண்டிருக்கும். அக்காற்றுக் கோடைக்கால உஷ்ணத்தையும் குளிர்காலச் சீதளத்தையும் குறைக்கும்.

ஆகவே, உஷ்ண தேசத்திலுள்ள சமவெளிகள் உஷ்ணமாகவும், உயர்ந்த மலைப் பிரதேங்கள் குளிர்ச்சியாகவும், கடற்கரைப் பிரதேசங்கள் கோடைக்காலத்திலும் குளிர் காலத்திலும் மித உஷ்ணமாகவும் இருக்கும்.

த:-மலைப் பிரதேசங்களில் மரங்கள் அடர்த்தியா யிருக்கின்றனவே என்ன காரணம்?

அ:-அங்கு அடிக்கடி மழை பெய்வதால் காடுகள் அடர்ந்து மரங்கள் உண்டாயிருக்கின்றன.

த:-அங்குள்ள ஜனங்கள் எப்படி ஜீவிக்கின்றார்கள்?

அ:-அப்பிரதேசத்திலுள்ள காடுகளில் மரங்களை வெட்டியும், வேட்டையாடியும் அங்குள்ள ஜனங்கள் ஜீவனம் செய்கிறார்கள். சில மலைச் சரிவுகளில்தேயிலை,காப்பி,ரப்பர், ஏலக்காய் முதலியவை பயிர் செய்யப்படுகின்றன. நூற்றுக்கணக்கான ஜனங்கள் அத் தோட்டங்களில் வேலை செய்கிறார்கள்.

த:-நாம் வசிக்கும் சமவெளியிலுள்ள ஜனங்களின் முக்கியத் தொழில் என்ன?

அ:-நமது பிரதேசத்தி லுள்ளவர்களின் தொழில் விவசாயம். இங்குச் சில நிலங்களில் நெல், வாழை, கருப்பு முதலியவைகள் பயிர் செய்யப்படுகின்றன; வேறு சில நிலங்களில் பருத்தி, சோளம் முதலியவைகளை ஜனங்கள் விளைவிக்கிறார்கள்.

த:-அதற்கு என்ன காரணம்?

அ:-நிலங்களில் நன்செய் என்றும் புன்செய் என்றும் இரண்டு வகைகள் உண்டு என்பது உனக்குத் தெரியுமல்லவா? உஷ்ணமும் மழையும் அதிகமான இடங்களில் நன்செய்ப் பயிர்களாகிய நெல், வாழை முதலியவைகளும், மழை குறைவான இடங்களில் பருத்தி, சோளம், கம்பு முதலிய புன்செய்ப் பயிர்களும் சாகுபடி செய்யப்படுகின்றன.

த:-அண்ணா, நம் ஊரில் ஆட்டு மந்தைகளையும், மாட்டு மந்தைகளையும் மேய்ப்பதற்கு எங்கேயோ ஓட்டிக்கொண்டுபோகிறார்களே! அவைகள் எங்கே மேய்கின்றன?

அ:-இடையர்கள் அவைகளை மலையடிவாரத்துக்கும், சாகுபடி செய்யாத இடங்களுக்கும் ஓட்டிக்கொண்டு போகிறார்கள். அங்கே புல் நன்றாய் வளர்ந்திருக்கும். அவைகள் அவ்விடங்களில் வயிறாரப் புல் மேய்கின்றன.

த:-நமது நாட்டின் சில பாகங்களில் பருத்தி விசேஷமாய்ப்பயிராகிறது. அங்குள்ள ஜனங்கள் என்ன தொழில் செய்கிறார்கள்?

அ:-பருத்தி பயிராகும் பாகங்களில் பஞ்சாலைகள் அனேகம் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அங்குள்ள ஜனங்களில் அநேகர் அவைகளில் வேலை செய்கிறார்கள். சிலர் நூல் நூற்றும், பஞ்சு வஸ்திரங்கள் நெய்தும் பிழைக்கிறார்கள். அப்பிரதேசத்தில் நூல் நூற்கும் இயந்திரசாலைகளும், நெசவு இயந்திரசாலைகளும் ஏற்படுகின்றன. அவைகளிலும் ஜனங்கள் வேலைசெய்து ஜீவிக்கிறார்கள்.

த:-கடற்கரைகளில் வாழும் ஜனங்களின் தொழில் என்ன?

அ:-கடற் கரைகளில் அநேகமாகச் செம்படவர்கள் வசிக்கிறார்கள். அவர்கள் கட்டுமரங்களிலும், படகு

களிலும் ஏறிச்சென்று, கடலில் மீன் பிடிக்கிறார்கள். அவர்கள் கடலில் நீந்துவதிலும் மூழ்குவதிலும் வல்லவர்கள்; ஆதலால் கடலில் அதிக ஆழத்திலுள்ள முத்து, ஸ்பஞ்சு முதலிய பொருள்களை எடுக்கிறார்கள்.

த:-சில இடங்களில் கள்ளி, எருக்கு, வேல் முதலிய தாவரங்கள் ஏன் அதிகமாக இருக்கின்றன?

அ:-சில பிரதேசங்களில் மழை மிகக் குறைவு. ஆதலால் அங்கு அதிகத் தண்ணீர் தேவையில்லாத கள்ளி முதலிய முட்களடர்ந்த தாவரங்கள் உண்டாயிருக்கின்றன. அவைகள் சில வருஷங்கள் மழையில்லா விட்டாலும் பட்டுப் போகமாட்டா.

த:-மலையாளத்திலிருந்து தேங்காய் ஏராளமாய் வருகின்றன; அவைகள் பெரியவையாயு மிருக்கின்றன. அதற்குக் காரணம் என்ன?

அ:-மலையாளம் கடற்கரைப் பிரதேசத்தில் இருக்கிறது. அங்குத் தரை மணற் பாங்கானது. மணற் பாங்கான இடங்களில் தென்னை, பனை, பாக்கு முதலிய மரங்கள் செழிப்பாய் வளரும். ஆதலால் அங்கே தென்னை மரங்கள் அதிகமாய்க் காணப்படுகின்றன. தேங்காய்கள் அங்கிருந்து அயல் பிரதேசங்களுக்கு வியாபாரத்திற்கு அனுப்பப் படுகின்றன. அங்குச் சவுக்கு மரங்களும் நன்றாய் வளர்கின்றன.

த:-இவ்வளவு உஷ்ணமான கோடைக் காலத்தில் மழை பெய்து கொண்டிருந்தால் குளிர்ச்சியாயிருக்குமே?

அ:-நீ சொல்வது உண்மைதான். ஆனால் இப்பருவத்தில் மழை பெய்வது அபூர்வம். நமது பிரதேசத்தில் ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் தான் மழைபெய்யும். ஏனென்றால் அப்பொழுதுதான் வடகிழக்கிலிருந்து ஒரு காற்று வீசுகிறது. அப்பொழுது மழை பெய்கிறது. அது தான் நமக்கு மழைக் காலம்.

த:-நமது நாட்டில் 'ஆடிப் பட்டம் தேடி விதை' என்று ஏன் சொல்லுகிறார்கள்?

அ:-ஆடி மாதத்தில் குடியானவர்கள் நிலங்களை உழுது விதைகளை விதைப்பார்கள். ஆவணி, புரட்டாசி மாதங்களில் கொஞ்சம் மழை பெய்யும். அதற்குள் பயிர்களும் முளைத்துச் சற்று வளர்ந்திருக்கும். ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் நல்ல மழை பெய்யும். அது பயிர்களுக்கு மிகவும் அனுகூலமாயிருக்கும். மார்கழி மாதக் கடைசியில் அல்லது தை மாதத்தில் கதிர்கள் முதிர்ந்து விடும். அப்பொழுது குடியானவர்கள் அறுவடை செய்வார்கள். ஆதலால் ஆடி மாதமே விதைப்பதற்கு மிகவும் தகுதியான காலம்.

த:-நிலங்களில் தை மாதம் அறுவடையான பிறகு ஆடி மாதம் வரை

குடியானவர்கள் என்ன செய்வார்கள்?

அ:-அறுவடையான பின் எள்ளு, நிலக்கடலை முதலியவைகள் பயிர் செய்யப்படுகின்றன. அவைகளுக்குத் தண்ணீர் அதிகமாகத் தேவையில்லை. சில சமயங்களில் கோடைக் காலங்களில் மழை பெய்வதும் உண்டு. இல்லாவிடில் கிணற்றிலிருந்து அப்பயிர்களுக்குத் தண்ணீர் இறைக்கப்படும். சில நிலங்களில் பருத்தியும் பயிர் செய்யப்படுகிறது.

த:-நமது நாடு முழுவதும் இவ்விதம் தான் விவசாயம் நடைபெறுகிறதா?

அ:-மலையாளக்கரையில் ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் ஏராளமான மழை பெய்கிறது. அங்கு அப்பொழுது உஷ்ணமும் தணிவடைகிறது. ஜனங்களும் அம்மாதங்களில் பயிர் செய்கிறார்கள். கோதாவரி, கிருஷ்ணா, காவேரி முதலிய நதிகள் பாயுமிடங்களில் ஜல வசதி அதிகமாயிருக்கும். ஆதலால் அங்கு நன்செய்களே அதிகமாய்க் காணப்படும். நெல், வாழை, கரும்பு முதலியவைகளே அங்கு விசேஷமாகப் பயிர் செய்யப்படுகின்றன.

த:-நமது நாட்டு ஜனங்களில் அநேகர் சட்டை யணிந்துகொள்வ தில்லையே. என்ன காரணம்?

அ:-நமது நாடு உஷ்ணமானது. நாம் சட்டை முதலியவைகளை அணிந்துகொண்டால் வியர்வை அதிகமாகிறது. நமக்குக் காற்றோட்டம் அதிகமாய் வேண்டும். அதனால்தான் நாம் கோடைக் காலத்தில் பஞ்சினால் செய்த இலேசான ஆடைகளை அணிந்து கொள்ளுகிறோம். குளிர்காலத்தில் நாம் கம்பளிப் போர்வைகளை உபயோகிக்கிறோம்.

த:-மலைப் பிரதேசங்கள் சமவெளியை விடக் குளிர்ச்சியாயிருக்குமே. அங்குள்ளவர்கள் என்ன ஆடைகளை அணிந்துகொள்வார்கள்?

அ:-அவர்கள் கம்பளியினால் செய்த உடைகளை அணிவார்கள். அவைகள் தேகத்திலுள்ள உஷ்ணத்தை வெளியே போகாமல் காக்கும்.

பயிற்சி

1. கோடைக்காலத்தில் உஷ்ணம் தாங்க முடியாமல் ஜனங்கள் எங்கெங்கே செல்கிறார்கள்? அந்த இடங்களில் உஷ்ணம் குறைந்திருப்பதற்குக் காரணம் என்ன?
2. மலைப்பிரதேசத்தில் உள்ள ஜனங்கள் எப்படி ஜீவிக்கின்றார்கள்?
3. கடற்கரைகளில் வாழும் ஜனங்களின் தொழில் என்ன?
4. நமது நாட்டில் 'ஆடிப்பட்டம் தேடி விதை' என்று ஏன் சொல்லுகிறார்கள்?
5. தைமாதம் அறுவடையான பிறகு ஆடிமாதம் வரை குடியானவர்கள் என்ன செய்வார்கள்?